Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 27 வெள்ளிக்கிழமை (12.09.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 346

## சர்வகட்சி பேரவை பரிந்துரைகளை அமுல்படுத்தாததே பாதக நிலை

### அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவிப்பு

சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை அமுல்படுத்தாமை காரணமாகவே அரசாங்கத்திற்கு பாதக நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்தாமையினால் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காமையினால் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்டுவது சிரமமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் புதிய ஆணையாளர் இளவரசர் அல் ஹூசெய்னை நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புறச் சக்திகளின் அழுத்தம் காரணமாகவும், தமிழ்மொழியை பூர்வீகமாகக் கொண்ட காரணத்தினாலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை பக்கச்சார்பாக செயற்

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி வர்த்தகர் மீது வவுனியாவில் கடும் தாக்குதல்

கிளிநொச்சியில் கடை வைத்திருக்கும் தன்னை வவுனியாவில் கடை நடத்தும் சிலர் அங்கு அழைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கடுமையாகத் தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தற்போது இந்த வர்த்தகர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சியில் ஹாட்வெயார் கடை நடத்தும் நடராஜா சுரேந்திரராஜா என்பவர் வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்களைப் பெற்று வந்துள்ளார். கொடுக்கல் வாங்கல் காரணமாக வவுனியா வர்த்தக நிலைய உரிமையாளர் அங்கு வருமாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை சுரேந்திரராஜாவை அழைத்துள்ளார். சுரேந்திரராஜா அங்கு சென்றதும் அவரை பலர் தாக்கியுள்ளனர். அங்கு கடையின் பின்புறமாக உள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

# 13ஆவது திருத்தச்சட்ட நடைமுறை கூட்டமைப்புடன் பேசத்தயார்

### இந்து நேர்காணலில் ஜனாதிபதி



13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தத் தாம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் வரும் 2015 ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளையும் அவர் நிராகரிக்க தவறியுள்ளார்.

இந்தியாவின் இந்து ஆங்கில நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இத் தகவல்களை தெரிவித்துள்ளார். அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்கள் அரசு உள்நாட்டு விசாரணைகளை நடத்தி வருகிறது. அதனை சர்வதேசமயமாக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இதனை அனுமதித்தால் ஐ.நா. மனித உரிமை ஆணையம் அடுத்த முறை காஷ்மீரில் சர்வதேச விசாரணை தேவை என்று கோரும், அதை அனுமதிப்போமா? இலங்கையாக இருந்தாலும் இந்தியாவாக இருந்தாலும் வெளியிலிருந்து விசாரணையை அனுமதிக்க முடியாது.

போர்க் காலத்தில் மர்மமான முறையில் காணாமற் போன 20,000 பேரை பற்றிய விசாரணை நடைபெற்று வருகிறது. விடுதலைப்

19 ஆம் பக்கம் பார்க்க

### மனித உரிமை நிலைவரம் குறித்து

## இலங்கை அரசின் பதிலுக்காக காத்திருக்கும் ஐ.நா.செயலர்

இலங்கை அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட போதிலும், அதற்கான பதில் இதுவரையில் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மனித உரிமை ஆர்வலர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பிலேயே இவ்வாறு தொடர்பாடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் பற்றி பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்

19 ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சர் நிதியத்திற்கான அனுமதி சட்டத்திற்கு முரணாக வழங்க முடியாது

### ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் நிதியம் தொடர்பான சட்டத்திற்கு முரணாக அனுமதிவழங்க முடியாது என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபைக்கான நிதியங்கள் எவ்வாறு உள்ளது என்றால் ஒன்று மாகாணசபை நிதியம் மற்றையது

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண அபிவிருத்திக்கு 6000மில். ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு 2015ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கென 6000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை, இந்து சமுத்திர நாடுகளை பாரிய சுனாமி தாக்கும் அபாயம்?

இலங்கை மற்றும் இந்து சமுத்திர நாடுகள் மற்றுமொரு கடுமையான சுனாமிப் பேரலைத் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட 9.2 ரிச்டர் அளவிலான பூகம்பம் காரணமாக ஏற்பட்ட சுனாமியினால், இலங்கை, இந்தியா உட்பட சுனாமி தாக்கிய நாடுகளில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இதனை விட மிகப் பெரிய சுனாமி பேரலை தாக்கத்தை இந்நாடுகள் எதிர்காலத்தில் எதிர்நோக்கக் கூடும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கெலி ஜெக்சன் உள்ளிட்ட ஆய்வுக் குழுவினர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

அதேபோல், இந்தியா, ஐரோப்பா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் புவி தட்டுக்களையும் அவர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

இதனடிப்படையில், அண்மைய காலத்திலும் கடந்த காலங்களிலும் பூமியில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி

19 ஆம் பக்கம் பார்க்க

மாவையாரின்
அகிம்சைப் போருக்கு
இன்னும்
110
நாட்கள்



விளம்பர அனுசரணை DD TV

# விபத்தில் சிக்கிய மூவர் காயம்

## நெல்லியடியில் விபரீதம்



(யாழ்ப்பாணம்)

நெல்லியடிச் சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி மூவர் காயமடைந்தனர்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதால் விபத்து ஏற்பட்டது. இரவு 7:15 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

# யாழில் பிரமாண்ட தொழிற்சந்தை;

# அடுத்த மாதம் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தொழில் சந்தையொன்றை எதிர்வரும் மாதம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளதாகவும் அந்த சந்தைக்கு 15இற்கும் மேற்பட்ட அங்கீரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களை அழைத்து வரவுள்ளதாகவும்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று வடமாகாணத்தில் வவுனியாவில் ஒன்று மட்டுமே இயங்குவதாகவும் வடமாகாணத்தின் வேறு மாவட்டங்களில் இல்லையெனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் வடமாகாண பணிப்பாளர் தம்பிராசா கோடீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்குகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் எதுவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்ல. வடமாகாணத்தில் வவுனியாவில் மட்டும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் இயங்குகின்றது. ஆகையால், அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் ஊடாக வெளிநாடு செல்வதற்கு முயற்சித்து ஏமாற்றங்கள் அடைவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அங்கீகரிக்கப்படாமல் வடமாகாணத்தில் இயங்கி வருகின்ற வேலை வாய்ப்பு நிறுவனங்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளேன். அமைச்சு இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு சென்று பாதிப்புக்கள் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கம் சட்ட ரீதியாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. அத்துடன், மாணவர் விசா வில் வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கு வசதிகள் ஏற்படுத்துவதாக கூறும் யாழில் இருக்கும் நிறுவனங்களும் அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் என அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுக்கு இந்தியாவின் தென்னிந்திய பாடகர் உன்னி கிருஸ்ணனையும் அழைத்து வரவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.


வாழ்க வளமுடன்

பெயர் : சா.சாதனா

முகவரி : ஸ்ரேசன் வீதி

சுன்னாகம் கிழக்கு

சுன்னாகம்

அகவை 3 இல்

பல்லாண்டு காலம்

வாழ்கவென

- வாழ்த்துகின்றோம்





## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)


# அமுலாக்கல் திட்டம் செயலமர்வு விரைவில்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஆசிரிய ஆலோசகர்களுக்குமான அமுலாக்கத் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்குரிய மேற்படி திட்டம் தயாரித்தல் செயலமர்வு இந்த மாதம் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு கணிதம், தமிழ், ஆங்கிலம், அழகியல் ஆரம்பக்கல்வி ஆகிய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், வர்த்தகம், சமூக விஞ்ஞானம், சமயம் ஆகிய பாடஆசிரிய ஆலோசகர்களுக்கும் நடைபெறவுள்ளது. (06)

# தகவல் தொழில்நுட்ப கற்கை நேர்முகத் தேர்வு விரைவில்

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் இடம்பெறவுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது. இப்பரீட்சைக்கு ஏறக்குறைய 20 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இபபரீட்சைக்கான பெறுபேறுகள் அண்மையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

இப்பெறுபேறுகளின் அடிப்படையில் 420 பரீட்சார்த்திகளே கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். புள்ளிகளின் அடிப்படையில் 100 பேர் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியைத் தொடர்வதற்கும் ஏனையோர் ஆங்கில மொழி கற்கை நெறியைத் தொடர்வதற்கும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சின் தேசிய கல்விக் கல்லூரிப் பிரிவின் ஆணையாளர் டயஸ் தர்மசேன தெரிவித்தார்.

# விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் 2 ஆம் கட்டப் பணி எதிர்வரும் திங்கட்கிழமை (14.09.2014) ஆரம்பமாகவுள்ளது.

இப்பணி யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, வவுனியா, கண்டி கொழும்பு, முதலான இடங்களில் தமிழ்மொழி மூல விடைத்தாள் திருத்தும் பணியாக அமைந்துள்ளது.

இந்த 2 ஆம் கட்ட மதிப்பிடல் பணியில் பொருளியல் வர்த்தகம் கணக்கியல், வரலாறு, புவியியல், இந்து சமயம், இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரீகம், இஸ்லாமிய நாகரி கம் முதலான பாடங்களிற்கான விடைத்தாள்கள் மதிப்பிடப்படவுள்ளன.

இப்பணியில் ஈடுபடுபவர்களிற்கெனப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் கூட்டம் கடந்த 9 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டிருந்தன.

இதில் மேலதிக பரீட்சார்த்திகள் பிரதம பரீட்சார்த்திகள கட்டுப்பாட்டுப் பரீட்சார்த்திகள் முதலானோர் கலந்து கொண்டிருந்தனர். (06)

# அத்துமீறிய இந்திய மீனவர்களுக்கு 25 ஆம் திகதி வரை விளக்கமறியல்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களுக்கும் எதிர்வரும் 25 ஆம் திகதி விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பிலும் நேற்று அதிகாலை மீன்பிடித்த மீன்பிடித்த 4 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இவர்களையே ஊர்காவற்றுறை நீதி மன்றில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மன்னார் கடற்பரப்பிலும் 30 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களும் நீதிமன்றில் உத்தரவுக்கமைய இம்மாதம் 24 ஆம் திகதிவரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2862 திகதி 10-09-2014

ஆங்கில எழுத்து: D

வெற்றி எண்கள் 17 32 59 61

போனஸ் இல 18

ஜக்பொட் பரிசு ரூ.18,761,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 231115 | 20/- | 4,622,300/- |
| 2 இல | 16592 | 100/- | 1,659,200/- |
| 3 இல | 345 | 1,000/- | 345,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9230 | 40/- | 369,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 637 | 1,000/- | 637,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,761,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 10938 | 100/- | 1,093,800/- |
| 2 இல + போனஸ் இல | 532 | 500/- | 266,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 461 | 200/- | 92,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269889 | | 11,743,200/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 19,392,800/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3504)


# வரவு – செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ். அபிவிருத்திக்கு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செயலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ்.நகரப் பகுதியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஆகியோரின் நிதிகளிலிருந்தே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த நிதி மூலமான அபிவிருத்திக்கு திட்டத்திற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான விபரங்கள் வருமாறு, கொழும்புத்துறை நெடுங்குளம் விளையாட்டுக்கழகத்திற்கு 25,000,00, கொழும்புத்துறை மின்மின் சனசமூக நிலையத்திற்கு 1,00,000,00, கொழும்புத்துறை 3 ஆம் குறுக்குத்தெரு சனசமூக நிலையத்திற்கு 1,00,000,00, ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகத்திற்கு 1,00,000,00, மருதடி றக்கா வீதி மாதர் சங்கத்திற்கு 1,00,000,00, எக்காளத் தொனி சபை, சேமக்காலை சுற்று மதில் புனரமைப்புக்கு 1,00,000,00, மத்தியூஸ் வீதி, மாதர் சங்கத்திற்கு 75,000,00, நெடுக்குளம் கொழும்புத்துறை மாதர் சங்கத்திற்கு 75,000,00, குருநகர் ஜே. 70 மாதர் சங்கத்திற்கு 1,00,000,00, யாழ்ப்பாணம் பெரிய கடை மாதர் சங்கத்திற்கு 50,000,00, நாவலர் பாடசாலைக்கு 50,000,00, அத்தியடி மாதர் சங்கத்திற்கு 50,000,00 என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் பவளவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது... (48)

# பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு விழாவும் சக்தி சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் எம்.விமலநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி, கலாசார விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

# நிர்வாக கூட்டம்

வலி.வடக்கு மீள்டியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு ஊடக இணைப்பாளர் ஆ.தரணிதரன் அறிவித்துள்ளார்.

# கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு விழிசிட்டி தமிழ்ப் பொதுப்பணி மன்றம் சனசமூக நிலையத்தினால் இலவச கணனி மற்றும் ஆங்கில மொழி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே இந்தக் கற்கை நெறியை பயில விரும்புபவர்கள் மன்றத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

# வீட்டின் கதவை உடைத்து பணமும் நகைகளும் திருட்டு

(சித்தங்கேணி)

சித்தங்கேணி பகுதியில் வீடொன்றில் முன்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு 15,000 ரூபா பணமும், 75000 ரூபா பெறுமதியான தங்க நகைகளும் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சித்தங்கேணிப் பகுதியில் வசித்து வரும் விஜய கோபால் ஜெயமாலா (வயது - 35 என்பவரது தங்க நகைகளே கடந்த செவ்வாய்க்கிழமை திருட்டுப் போயுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளன.

மேலும் அன்றைய தினம் முற்பகல் 10.00 மணியளவில் வீட்டைப் பூட்டிவிட்டு உரிமையாளர் வெளியில் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் முன்பக்க கதவுகள் உடைக்கப்பட்டிருந்தாகவும், அங்கிருந்த பணமும் நகைகளும் திருட்டுப் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை பொலிஸார் மோப்ப நாய்களை ஈடுபடுத்தி இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இதுக்குப் பிறகுதான் இந்த ஞானோதயம் இராசவரோதயம் சம்பந்தனுக்கு வந்திருக்கு!

வடபுலத்தான் எழுதுவது...

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகிற பேச்சுவார்த்தைக்குத் தயார். ஆனால் ஆறுமாதத்துக்குள்ள பேச்சுகள் முடியவேணும் எண்டு சம்பந்தன் அறிவிச்சிருக்கிறார்.

இது விழுந்தாலும் மீசையில மண் படேல்ல எண்ட மாதிரியான ஒரு கதைதான்.

மோடி இந்தியப்பிரதமராக வந்தவுடனே ஏதோவெல்லாம் நடக்கப்போகுது எண்டு நம்பியிருந்தவைக்கு மோடியைச் சந்திச்ச பிறகுதான் கன விசயங்கள் விளங்கியிருக்கு.

இந்தியாவுக்குப் போன கூட்டமைப்பு எம்பிமார் இலங்கை அரசாங்கத்தைப் பற்றியும் மகிந்த ராஜபக்ஷவைப் பற்றியும் மோடியிட்டைப் போட்டுக்குடுத்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த மோடி சொன்னாராம், 'எதுக்கும் நீங்கள் முதலில் கொழும்புடன் பேசுங்கள். இலங்கையில் உள்ள ஏனையவர்களோடயும் பேசுங்கள். அதுக்குப் பிறகு எங்களுடன் பேசுங்கள். நாங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் இதுவரை அப்படிச் செய்திருக்கிறீர்களா?' எண்டு.

இதைக்கேட்ட கூட்டமைப்புக்காரருக்கு வேர்க்கத் தொடங்கீட்டுதாம்.

இதைச் சொன்னதே இந்தச் சந்திப்புக்குப் போய் வந்த ஒரு எம்பிதான்.

இதுக்குப் பிறகுதான் இந்த ஞானோதயம் இராசவரோதயம் சம்பந்தனுக்கு வந்திருக்கு எண்டார் அந்த எம்பி.

ஆனால் இதையெல்லாம் வெளியில சொல்ல முடியுமா?

இதுநாள் வரையிலயும் சனங்களுக்கு வீரப் பேச்சுப் பேசிக் காட்டிப்போட்டு சடாரெண்டு மகிந்தற்றை கால்லில போய் விழுகிறது எண்டால்.....!?

அதனாலதான் இந்த காலக்கெடு விதிப்பு!

ஆனால், இப்பிடிக் காலக் கெடு விதிச்சு, பேச்சுகளுக்கு நிபந்தனை விதிச்சு, தட–ாலடி, அதிரடி விளையாட்டெல்லாம் காட்டின புலியான புலிகளே இப்ப வரலாற்றில் இருந்த இடத்தையே காணவில்லை எண்டதை இன்னும் இந்த இராசவரோ–தயம் சம்பந்தனுக்கும் அவற்றை கும்பலுக்கும் விளங்கேல்ல எண்டால்... வரலாறு கைகொட்டிச் சிரிக்காமல் சம்பந்தன்ரை முதுகில தட்டிப் பாராட்டுமா?

எப்பிடித்தான் நீங்கள் சொன்னாலும் எதைத்தான் படிச்சாலும் வேதாளத்துக்கு முருங்கை மரத்தில ஏறுகிறதுதான் பழக்கம்.

என்ன பாடு பட்டாவது பேச்சுவார்த்தைக்குப் போகக் கூடாது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடாது, சனங்களுக்கு நன்மை கிடைக்கக் கூடாது, நாட்டில அமைதியும் இணக்கமும் ஏற்படக் கூடாது எண்டதில வலு கவனமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருக்கு.

இனவாதத்தைக் கையிலயும் நெஞ்சிலயும் ஆயுதமாக வைச்சிருக்கிறவை இப்பிடித்தான் சிந்திப்பினம்.

இதுக்காக மற்றப்பக்கத்தில ஏதோ எல்லாம் சரியாக நடக்குது. அந்த மாதிரி இருக்குது எண்டு நான் சொல்ல வரேல்ல.

ஆனால், அவைக்கு நாங்கள் வாய்ப்பைக் குடுக்காமல் இருக்க வேணும் எண்டதையே சொல்லிறன்.

கடந்த காலத்தில – சிங்களத் தலைமைகள் எல்லாம் மக்களை ஏமாற்றினவை எண்டு பழைய கதையை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கேலாது.

அது பொருத்தமானதும் இல்லை.

அப்பிடியெண்டால் தமிழர்களைப் பற்றியும் முஸ்லிம் மக்களும் மலையக மக்களும் அப்படித்தான் குறை சொல்லுவினம். ஏன் இது மட்டுமா, தமிழாக்களுக்கையே சாதிபார்த்து ஒதுக்கப்பட்ட – ஒரங்கட்டப்பட்ட சனங்களும் தங்கட கடந்த கால அனுபவத்தை வைச்சு நடக்க முற்படுவினம்.

ஆகவே, இந்தப் பழைய கதைகளை எல்லாம் தூக்கி திரும்பத்திரும்ப மேசையில வைக்கிறதை விட்டுப்போட்டு, அந்த அனுபவங்களை மனசில வைச்சுக்கொண்டு, புதிய தந்திரோபயங்களோட பேச வேண்டியதுதானே.

அதுக்குத்தானே சர்வதேச சமூகத்தின்ர ஆதரவு இருக்கெண்டு இந்தக் கூட்டமைப்புக்கொம்புகளே பல தடவை சொன்னதை நானே கேட்டிருக்கிறன்.

வேணுமெண்டால், பேச்சுக்குப் போறதுக்கு முதல், இந்தச் சர்வதேசத் தலைகளுக்கு (டேவிட் கமறூன், ஒபாமா, மோடி போன்ற ஆக்களுக்கு) இராசவரோதயம் சம்பந்தன் ஒருக்கால் தகவல் சொல்லலாம். (இவையிட்ட எல்லாம் அனுமதி எடுத்துதான் சம்பந்தன் அரசியல் நடத்த வேண்டியிருக்கு எண்டது இன்னொரு கோதாரி... தூ!)

நல்லாய்ச் சிந்திக்கிறவைக்குத் தெரியும். இராசவரோதயம் சம்பந்தன் தரப்பின்ரை அரசியல் ஞானோதயத்தைப் பற்றியெல்லாம்.

அறிவுச் சூனியங்களாகவே ஆண்டுகள் பலவாக அரசியல் நடத்திய மாபெரும் மே(ப)தைகள் எண்டு மட்டுநகரிலிருந்து எழுகதிரோன் வலு சோக்காகச் சொல்லியிருக்கிறார்.

இந்த விறுத்தத்திலதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எண்ட பேரில இயங்கிக் கொண்டிருக்கிற தமிழரசுக்கட்சி வவுனியாவில கட்சி மாநாட்டைக்கூடிப் புதிய தலைவரைத் தெரிவு செய்திருக்கு.

இந்தப் புதிய தலைவர் பேசிய செய்தியோ முப்பது வருசத்துக்கு முந்தி நான் ஆவரங்காலில கேட்ட பழைய – புளித்துப் போன கதை.

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யார் அந்தத் துரோகிகள்?

மகாபாரதக் கதை வாசித்தவர்களுக்கு அல்லது இப்போது தொலைக்காட்சியில் தொடராகப் பார்ப்பவர்களுக்குத் தெரியும், தர்மம் அதர்மம் நல்லவர் கெட்டவர் என்றெல்லாம் யாரையும் திடமாகச் சொல்லிவிட முடியாதென்பது.

தர்மவான்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லோரும் சபை நடுவே ஒரு பெண்ணின் துகிலுரிவதையும் மாற்றான் ஒருவன் தன் தொடைமீது வந்திருக்கச் சொல்வதையும் கையைக்கட்டி வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பதைத் தர்மமாகக் கருதிக் கொள்கிறார்கள்.

அதேசமயம் வில்லனாகச் சொல்லப்படும் துரியோதனன், சக மனிதன் இழிவுபடுத்தப்படுவதைப் பொறுக்க முடியாதவனாய், அவனைத் தன் தோழன் என்று அணைத்துக்கொண்டு பெருமைப்படுத்துபவனாக இருக்கிறான்.

மகாபாரதத்தின் மிகத் தீய பாத்திரமாக வர்ணிக்கப்படும் சகுனி கூட, உண்மையில் வில்லன் அல்ல, அதர்மத்தை அழிப்பதற்காகவே துரியோதனனை உறவாடிக் கெடுத்தான் என்பதாக பாரதத்தின் கிளைக்கதை ஒன்று உண்டு.

நமது அரசியலிலும் காலத்துக்குக் காலம் ஆதிக்கம் பெற்றிருந்தவர்களால் துரோகிகள் எனப் பலப்பலர் மக்களுக்கு இனங்காட்டப்பட்டார்கள். ஆனால் காலம் நமக்குத் தந்த படிப்பினைகளுக்குப் பிறகு திரும்பிப் பார்க்கையில், யார் துரோகிகள் என்ற கேள்விக்கு பதில்கள் வேறாக மாறுவதை அறிகிறோம்.

துரையப்பாவையும் குமாரசூரியரையும் துரோகிகளாக மக்களுக்குச் சொன்ன தலைவர்களில் யாரும், அவர்கள் இந்த சமூகத்திற்குச் செய்ததில் ஒரு எள்முனையளவைக் கூடச் செய்ததில்லை என்று இன்று தெரிந்துகொண்டிருக்கிறோம்.

பிறகு இவர்களை விஞ்சிச் சமூகத் தலைமையை எடுத்துக் கொண்ட இளைஞர்கள், வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு ஆதரவு தெரிவிக்கிறார் என்பதற்காக அமிர்தலிங்கத்தைத் துரோகி என்றபோது, மௌனம் காத்தும் 20 வருடங்களாக அவருக்கு அஞ்சலி செலுத்தாமலும் அதையே தமிழ்ச் சமூகத்தின் கருத்தாக மாற்றினார்கள்.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபைத் தீர்வை எடுத்துச் செயற்படுத்தியதற்காக பத்மநாபாவையும் தோழர்களையும் துரோகிகள் என்று அறிவித்துக் கொல்லப்பட்டபோதும் இந்தத் தலைவர்கள் கள்ள மௌனத்தால் அங்கீகரித்தே இருந்தார்கள்.

பின்னர் சந்திரிகாவுடன் இணைந்து நீலன் திருச்செல்வம் தமிழர்களுக்கான சமஷ்டித் தீர்வை வரைந்தபோது, அவரும் மக்களுக்குத் துரோகியாக இனங்காட்டப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் துரோகி என்றதையும் இவர்கள் எதிர்த்து எதுவும் பேசாமல் ஒட்டுமொத்த சமூகத்தின் கருத்தாக்கிக் காண்பித்தார்கள்.

சண்டையால் இதற்குமேல் அழிவைத் தவிர ஒன்றும் சாதிக்க முடியாது என்று வேறு வழிக்கு மாற முற்பட்ட மாத்தையாவும் துரோகியாகச் செத்தார். அதன்பிறகு, தொடர்ந்தும் சண்டையிட்டுச் செல்வது ஒன்றே தமிழர்களுக்கான ஏக மார்க்கம் அவர்களே ஏகப்பிரதிநிதிகள் என்று மக்களுக்குச் சொல்லிப் பாராளுமன்றப் பதவிகளைப் பிடித்துக்கொண்டவர்கள் இவர்கள்.

இதற்கெல்லாம் பிறகுதான் முள்ளிவாய்க்கால் வரை சென்று அத்தனை இளைஞர்களும் மக்களும் அழிந்தார்கள். அது நிகழாமல் தவிர்த்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் முன்னர் உருவான போதெல்லாம் அமசடக்காக இருந்து மற்றவர்களைத் துரோகிகளாகக் காட்டி வந்தவர்கள் இவர்கள்.

அன்று இவர்கள் துரோகிகளாகச் சித்தரித்தவர்கள் எடுக்க முற்பட்ட தீர்வுகளுக்கெல்லாம் குறைவான தீர்வொன்றைப் பேசுவதில் இன்று வந்துநிற்கிறார்கள். அவர்கள் துரோகிகளா? இவர்கள் துரோகிகளா?

அபிவிருத்தியைச் செய்ததற்காக துரையப்பா, குமாரசூரியர் போன்றோரைத் துரோகிகளாகவும், மக்களை அழியவிடாமல் காப்பாற்றும் புத்திசாலித்தனமாக – நடைமுறைச்சாத்திய தீர்வொன்றை எடுப்பதற்கு முனைந்த அமிர்தலிங்கம், பத்மநாபா, நீலன், இன்று டக்ளஸ் தேவானந்தா வரை துரோகிகள் என்று சொல்லிவந்த இவர்கள்தான் உண்மையில் அந்தத் துரோகிகள் என்பதை வரலாறு இன்று காட்டிக்கொடுத்திருக்கிறது.

- ஆசிரியர்

# உருளைக்கிழங்கில் அரசியல் இலாபம் தேடமுயலும் எதிர்க்கட்சிகள்

## – பிரதமர் குற்றச்சாட்டு –

உருளைக்கிழங்கு விவகாரத்தை பயன்படுத்தி அரசியல் லாபம் பெறுவதற்கு எதிர்கட்சிகள் முயற்சிக்கின்றன ஆனால் அரசாங்கம் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களினதும் மக்களினதும் நன்மை கருதி பல விதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பிரேரணை சமர்ப்பிப்பு விவாதத்தின் போது 23/2 நிலையியல் கட்டளையின் கீழ் ஜே.வி.பி. யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களின் அனைத்து உற்பத்திகளையும் 80 ரூபா என்ற நிர்ணய விலைக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் உருளைக் கிழங்கை விட இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு சுவையானது.

நான் விவசாயத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து குறைந்த விலையில கிழங்கை இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்தினேன்.

அதற்காக வரிவிதிப்பை அதிகரித்தேன். உள்நாட்டு கிழங்கு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காக கிழங்கு 1 கிலோ கிராமினை 80 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழங்கு அறுவடை காலத்தில் இரு வாரங்களுக்கு முன்பிருந்தே இறக்குமதிக்கான வரி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு கிழங்கு உற்பத்தி ஆகஸ்ட் மாத நடுவிலிருந்து டிசம்பர் வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்போது கிழங்கு இறக்குமதி முற்றாக நிறுத்தப்படும். 2014.02.26 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களின் படி உருளைக் கிழங்கு கொள்வனவுக்காக நாடு பூராகவும் ஐந்து மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று வரை அனைத்து மக்களின் நன்மை கருதி 824 மெற்றிக்தொன் கிழங்கு கொள்வனவு செய்ய்ப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் 15,836 மெற்றிக் தொன்னும், மே மாதத்தில் 8,587 மெற்றிக் தொன்னும், யூனில் 9,250 மெற்றிக் தொன்னும், யூலை மாதத்தில் 24,343 மெற்றிக் தொன்னும் ஆகஸ்ட்டில் 14,328 மெற்றிக்தொன்னும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## – நீரிழிவு நோயாளர்களுக்கு உதவுவதற்காக –

# பச்சைமிளகாய் சவாலை நிறைவேற்றிய ஐ.தே.க. எம்.பி.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பச்சை மிளகாய் சவாலை ஏற்றுக் கொண்டு அதனை செய்து காட்டியுள்ளார்.

இலங்கையில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இளைஞர்கள் சிலர் இந்த புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளனர்.

"ஐஸ் பக்கட் சாய" திட்டத்திற்கு எதிராக "பச்சை மிளகாய் சவால்" என்ற திட்டத்தை இளைஞர்கள் அறிமுகம் செய்துள்ளனர்.

சவாலின் விதிகள்படி, சவால் விடுக்கப்படும் நபர் அந்த சவாலை ஏற்றுக் கொண்டால் 100 ரூபா நிதி உதவி அளிக்க வேண்டும்.

பச்சை மிள்காய் சவாலை ஏற்காவிடின் 1000 ரூபா வழங்க வேண்டும். சவால் விடப்படும் நபர்கள் தாங்களும் ஐவருக்கு சவால் விடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சவாலை ஏற்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண நேற்று நாராஹென்பிட்டியில் ஊடக சந்திப்பு நடத்தி மூன்று பச்சை மிளகாய்களை குறுகிய நேரத்தில் உண்டார்.

அதன்பின்னர் சவாலுக்கு செலுத்த வேண்டிய தொகையை விட புத்திக பத்திரண அதற்கும் மேலதிகமான நிதியை செலுத்தினார்.

அத்துடன், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரப்பெரும, கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனநாயகக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.அருண தீபால், ஊடகவியலாளர் சமன் பிரியன்கர நம்முனிகே மற்றும் நடிகர் காவிந்த பெரேரா ஆகியோருக்கு புத்திக பத்திரண "பச்சை மிளகாய் சவால்" விடுத்துள்ளார்.

இதனையடுத்து, கருத்துத் தெரிவித்த அவர், 1930ஆம் ஆண்டு வல்லாதிக்கவாதிகள் அறிமுகப்படுத்திய "பொப்பி மல்" திட்டத்திற்கு எதிராக இலங்கை இடதுசாரி சக்திகள் உருவாக்கிய "சூரிய மல்" திட்டத்தைப் போன்று புதிய பச்சை மிளகாய் சவால் திட்டம் அமைவதாக குறிப்பிட்டார்.

## மாகாணசபை அமர்வில் "சொட்டைக்கதை"

நாங்கள் மாகாணசபை உறுப்பினர்கள் நாங்கள் உங்களுக்கு சொல்கின்றோம். ஆனால் நீங்கள எடுத்தெறிந்து பேசும் வகையில் செய்வோம் என சொல்வது மிகத் தவறானது சும்மா செய்வோம் என சொல்லி சமாளித்துக்கொண்டு "சொட்டை" கதை கதைக்கிறீர்கள் என அவைத்தலைவரை கடிந்தார். பிரதி அவைத்தலைவர் அன்ரன் ஜெயநாதன். நாம் பதவிக்கு வந்து ஒருவருடம் ஆகின்றது. ஒரு சட்டத்தை தன்னும் உங்களால் இயற்ற முடியவில்லை ஒரு வல்லுனரை மட்டும் வைத்திருக் கிறீர்கள் மக்களின் அபிப்பிராயத்தைத்தான் நாம் சொல்கின்றோம்.

ஒரு சட்டத்தை தன்னும் நீங்கள் செயற்படுத்தவில்லை சும்மா நீங்கள் சமாளித்துக்கொண்டு "சொட்டை கதை" கதைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என அவையின் பிரதித்தலைவர் கடிந்து கொண்டார். (இ)

# பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு 20 நிலையங்களில் தலைமைத்துவப் பயிற்சி

பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 23 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியில உள்ள முப்படையினரின் 20 பயிற்சி நிலையங்கள் ஊடாக கட்டங்கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடகமையத்தின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் சமகால விவகாரங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும வாராந்த செய்தியாளர் சந்திப்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் உயர் கல்வி அமைச்சின் புதிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் நான்காம் கட்ட பயிற்சிகள் கன்னொறுவயிலுள்ள இராணுவத்தின் இயந்திரவியல் மற்றும் பொறியியல் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


முதற்கட்டமாக கடந்த 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை 7500 பேருக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் இரண்டாவது கட்டமாக ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 8000 பேருக்கும் மூன்றாவது கட்டமாக ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம 19 ஆம் திகதி வரை 8000 பேருக்கும் கட்டம் கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றார்.

# பட்டதாரி பதவியுயர்வுகள் குறித்து

# மாகாணம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரச சேவைகள் பட்டதாரிகளின் பதவியுயர்வு தொடர்பில் மாகாண பொது நிர்வாக செயலகம் நட்வடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வடமாகாண அரச சேவைகள் பட்டதாரிகள் சார்பாக வடமாகாண அரச சேவைகள் பட்டதாரிகள் சங்கத் தலைவர் கனகசபாபதி கஜிதன் கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கலந்துரையாடலும், வருடாந்த பொதுக்கூட்டத்துடன், நிர்வாக தெரிவும் இடம்பெற்றது.

கடந்த 2005 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போது, அரச சேவைகள் பட்டதாரிகள் •எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சங்கமாக இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் கடமையாற்றுகின்றவர்கள், எதிர்காலத்தில் கடமையாற்றப் போகின்றவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் 600 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். பதவியுயர்வு மற்றும் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் பரீட்சைகள் மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனா. வடமாகாண ஆளுநர் மற்றும் திணைக்கள அதிகாரிகளிடம் கதைத்த போது, பரீட்சைகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால், பதவியுயர்வு சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்றார்.

பட்டதாரிகளுக்கு கிடைக்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுகின்றன. அரச அதிகாரிகளுக்கு கிடைக்கும் சலுகைகள், அரச பட்டதாரிகளுக்கும் கிடைக்க ஆவண செய்ய வேணடும். தனிப்பட்ட பிரச்சினைளுக்காக நாம் குரல் கொடுக்கவில்லை பட்டதாரிகளின் உரிமைக்காக குரல் கொடுக்கின்றோம். இன்று எமது தொழிற்சங்க கலந்துரையாடல் கூட்டப்பட்டமைக்கான காரணம் பட்டதாரிகளின் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது மற்றும் நிர்வாக குழுக்கள் தெரிவு பட்டதாரிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கிடைக்கப்பட்டுள்ள போதிலும், எமது தொழிற்சங்கள் பல இளைஞர் களின் நம்பிக்கையுடன் தொழிற்படுவதனால், எமது பிரச்சினைகளை தீர்க்க கூடியதாக இருக்கின்றது.

இக்கூட்டத்தின் போது, நிர்வாகத் தெரிவு மற்றும் அரச சேவைகள் பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடாபில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதிய தலைவராக கனகசபாபதி கஜிதனும், செயலாளரா கவும், ந.ஐங்கரன் ச.சேந்தன் பொருளாலராகவும், நியமிக்கப் பட்டுள்ளதாகவும் வடமாகாண அரச சேவைகள் பட்டதாரிகள் சங்கத் தலைவர் மேலும் கூறினார். (25)

# கைதான இந்திய மீனவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்).

யாழ்.பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 21 பேரை கைதுசெய்துள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி நேற்று தெரிவித்தார்.

பருத்தித்துறை கடற்பரப்பிற்கு அண்மித்த பகுதியில் 1 படகில், 21 மீனவர்கள் அத்துமீறி மீண்பிடியில் ஈடுபட்ட போது, காங்கேசன்துறை கடற்படையினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டு, யாழ்.மாவட்ட கடற்றொழில மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 21 மீனவர்களும் இந்திய நாகைமாவட்டம் பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார். (25)

# ஈனச்சிக்குளம் புனரமைப்பு திடீரென இடைநிறுத்தம்

(முழங்காவில்)

பூநகரிப்பகுதியில் உள்ள "ஈனச்சிக்" குளத்தை விஸ்தரிக்கும் நோக்கோடு குளக்கட்டுக்களை அமைப்பதற்கும், ஆழமாக்குவதற்குமான 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு சென்ற வாரம் வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்ற நிலையில் திடீரென நிறுத்தப்படும் நிலை உருவாகியுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது இக்குளப்பகுதி தங்களுக்குச் சொந்தமானது எனவும், இதில் எவ்விதவேலையும் செய்யமுடியாது எனவும் வன பரிபாலன இலாகவினால் பூநகரி பொலிஸில் புகார் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அக்குளப்பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி உழவு இயந்திரம் மற்றும் பெட்டியுடன் சாரதியை கைது செய்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் புனரமைப்பு செய்யப்பட்டுவந்த குளக்கட்டு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கமநலசேவை நிலைய தலைவர் கா.யோகராசா தெரிவித்தார். (112)

# முதியோர்தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இவ் வருடமும் சர்வதேச முதியோர் மாற்றுவலுவுடையோர் தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச முதியோர் தினத்தின் கருப்பொருளாக 'முதியோர் எவரையும் புறம் ஒதுக்காமல் ஜதார்த்தமான சமூகத்தை கட்டி எழுப்புவோம்' என்ற தொனிப்பொருள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டிசம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தின்கருப்பொருளாக மாற்று ஆற்றலுடையோருக்கு நிலைத்த அபிவிருத்திக்கான சிறந்த தளத்தை தொழில் நுட்பத்தின் ஊடாக வழங்குதல் என்ற மகுட வாசகம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று பாடசாலை மட்டத்தில்மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளையும், அதே போன்று பொது மக்களிடையேயும் அதே போன்ற போட்டிகளை நடத்துமாறும் சமூக சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர்கள் சமூக சேவைகள் அலுவலர்கள் ஊடாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

# விஞ்ஞான பாட இரசாயனவியல் மதிப்பீட்டு பரீட்சை நாளை

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத ரா தர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வலயமட்டத்திலான விஞ்ஞான பாட இரசாயனவியல் மதிப்பீட்டுப் பரீட்சை (2 ஆம மதிப்பீடு) நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1.30 மணிவரை நடைபெறுமென யாழ்ப்பாண கல்வி வலயத்தின் விஞ்ஞானப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோபபாய் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக நடாத்தப்படும் இப்பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை இன்று முற்பகல் 10 மணிக்குப் பின்னர் உரிய பாடசாலைகள் தமக்குரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் விடைத்தாள்கள் உரிய பாடப் பொறுப்பாசிரியரினால் மதிப்பீடு செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள புள்ளிப்பகுப்பாய்வு படிவ மாதிரிக்கமைய புள்ளிப்பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரங்கள் யாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்ப்பாண கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (03)

# நீர் இறைக்கும் இயந்திரம் மட்டுவில் பகுதியில் திருட்டு

மட்டுவில் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தோட்டக் காணியில் உள்ள குழாய்க் கிணற்றுடன் இணைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் சூரிய சக்தி பெறும் இயந்திரம் ஆகியன திருட்டுப் போயுள்ளதாக கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த கணேஸ்வரத்துக்கு கமநல சேவைகள் திணைக்களத்தினால் 20,000 ரூபாவுக்கு வழங்கப்பட்ட இயந்திரங்களே கடந்த முதலாம் திகதி காலை 7.30 மணியளவில் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு அதிகரித்துவரும் தற்கொலைகளைத் தடுக்கும் முகமாக யாழ்.பல்கலைக் கழக உளவியல் மெய்யியல் துறையினரின் சமுதாய வழிகாட்டல் மையத்தினர் தற்கொலை விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றினை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் பகல் ஏற்பாடு செய்திருந்தனர். இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக உளவியல் மெய்யியல் துறையினரின் சமுதாய வழிகாட்டல் மையத்தினர் உட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அதிகளவில் பங்குபற்றினர். (48)

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வராமைக்கு ஊழல் மோசடிகளே காரணம்

## ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

நேரடி ஊழல் மோசடிகள் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது நாட்டுக்கு வருவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் சத்தம் போடுவதனாலோ அல்லது ஊடகங்களில் ஊழல் பற்றி செய்தி வெளியிடப்படுவதனாலோ வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்கவில்லை.

நாட்டில் இடம்பெற்று வரும் பாரியளவிலான நேரடி மோசடிகள், ஊழல்களே முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய தயங்குவதற்கான காரணமாகும். போரின் பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்திருக்க வேண்டும்.

வியட்நாம் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையில் ஏன் முதலீடுகளை அதிகரிக்க முடியாது. வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க முடியாமைக்கு சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைவும் ஓர் பிரதான காரணியாகும்.

விரைவில் நாம் ஆட்சியை அமைப்போம் அதன் பின்னர் நேரடி முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

# சீனாவின் எக்சிம் வங்கித்திட்டம் மூலம் இலங்கையில் 21 அபிவிருத்தித் திட்டங்கள்

சீனாவின் எக்சிம் வங்கித் திட்டத்தின் மூலம் இலங்கையில் 21 இற்கும் மேற்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வங்கியின் பொது முகாமையாளர் லீ வென்ராவோ தெரிவித்துள்ளார்.

சீனாவில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தக பொருளாதார வங்கி யாக விளங்கும் எக்சிம் வங்கி இலங்கையில் அதிவேக நெடுஞ் சாலைகள், மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்காக நீண்டகால உடன்படிக்கை ஒப்பந்தங்களை கைச்சாத்திடவுள்ளது.

இவ் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் பணியானது சீனாவின் ஜனாதிபதி பி.ஜிங்பிங்கின் இலங்கை விஜயத்தின்போது இடம்பெறும்.

இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கை யின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் சீனா எவவாறான உதவிகளை வழங்கி வருகிறது எனவும் இரு நாடுகளுக்குமிடையில் நட்புறவுக் கொள்கைகள் எவ்வாறு பாராட்டப்படுகின்றன எனவும் காணக்கூடியதாக இருக்குமென லீ வென்ராவோ மேலும் தெரிவிததார்.

கடந்த வாரம் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்துகொண்ட இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த வங்கியின் உதவி முகாமையாளர் இவ்அபிவிருத்தி திட்டங்களுக்கென 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# சாட்சிகள் பாதுகாப்பு சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

குற்றச் செயல்களில் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சியாளர்களுக்கும் உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கும் விதிமுறைகளை உருவாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

குற்றச் செயல்களில் பலியாக்கப்பட்டோரினதும், சாட்சியாளர்களினதும் பாதுகாப்பிற்கான அதிகார சபையை ஸ்தாபிப்பதற்கு இந்தச் சட்டமூலத்தின் ஊடாக வழியேற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

குற்றச்செயல்களில் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களின் உரிமைகளையும், உரித்துடைமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான விதிமுறைகளும் இந்தச் சட்டமூலம் ஊடாக ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கோத்தாபயவின் அர்ப்பணிப்பே கொழும்பு நகரின் சிறப்புக்கு காரணம்

## ஜனாதிபதியின் செயலாளர் புகழாரம்

கொழும்பு நகரம் சிறப்பான நிலையை அடைய கோத்தாபயவின் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான ஆற்றல் என்பனவே காரணம் என ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

450 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொழும்பு மாநகரசபையிடம் கையளிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

இந்நிகழ்வு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வளாகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தனது சகோதரரான கோத்தாபய ராஜபக்ஷவை அரசியலுக்கு அழைக்குமாறு ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

ஜனாதிபதியின் விருப்பத்தை நான் கோத்தாபயவிடம் கூறிய போது, அதற்கு அவர் அளித்த பதில் மிகவும் அபூர்வமான ஒன்று. உண்மையில் நான் இராணுவ அதிகாரி. அதன் காரணமாக நான் எனது கடமையை சரியாக செய்தேன். அதைவிட செய்வதற்கு எனக்கு வேறு ஒன்றுமில்லை. ஆனால் நகர அபிவிருத்தித்துறை ஏதாவது கொடுத்தால் அதனைச் செய்து பார்க்கிறேன் என ஜனாதிபதியிடம் கூறுங்கள் என்று சொன்னார்.

உண்மையில் நான் இன்று மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் கூறியதை நான் ஜனாதிபதியிடம் சொன்னதும் அவர் மிகவும் விருப்பத்துடன், பாதுகாப்பு மற்றும் நகரஅபிவிருத்தி அதிகார அமைச்சினை உருவாக்குமாறு என்னிடம் கூறினார்.

நான் அன்று செய்தது மிகவும் சிறிய காரியம். ஜனாதிபதி சொன்னதை கோத்தாபயவிடம் கூறினேன். அரசியலில் ஈடுபட விரும்பம் இல்லாத நிலையில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக பொறுப்பேற்ற கோத்தாபய, பதவியேற்ற நான்கரை ஆண்டுகளில் சிறப்பாக செயற்பட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியில் அவரின் பங்கு அளப்பரியது. இவரின் சிறந்த சேவையை நான் பாராட்டுகின்றேன் மேலும் கொழும்பு மாநகர சபையின் அபிவிருத்திக்காக இன்றைய தினம் 450 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாகனங்கள் மறறும் உபகரணங்களையும் பெற்றுகொடுத்தமைக்கு எனது நன்றியையும் மகிழ்ச்சியைத் தெரிவித்துகொள்கின்றேன்.

நான் 1961 ஆம் ஆண்டினை நினைத்து பார்க்கின்றேன். இப்போது கொழும்புக்கு வருவதென்பது ஒரு கனவு போன்றது, 53 வருடங்களுக்கு முன்னர் நான் எனது சிறுவயதில் முதன் முதலில் கொழும்பு நகரத்திற்கு வருகை தந்த போது, பார்த்ததற்கும் இப்போது கொழும்பு நகரம் காணப்படும் நிலைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அப்போது வாகனத்தில் செல்லும் சிலர் குப்பைகள் நிறைந்த பைகளை தெருவில் வீசிவிட்டு செல்வதைக் கண்டிருக்கின்றேன். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. கொழும்பு நகரம் அவ்வளவு தூய்மையாகவுள்ளது. மக்களும் நகரின் தூய்மையை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்துகின்றனர்.

# ஊவா மாகாண சபைத் தேர்தல் திட்டமிட்ட தினத்தில் நடாத்தப்படும்

ஊவா மாகாண சபைத் தேர்தல் தினத்தைப் பிற்போடுவதற்கோ மொனராகலை மாவடடத்துக்கு வேறொரு தினத்தை ஒதுக்குவதற்கோ எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவாறு இம்மாதம் 20 ஆம் திகதி பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கான தேர்தல்கள் நடைபெறும் இவ்விரு மாவட்டங்களிலும் மேற்கொண்ட நேரடி விஜயத்தின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

மொனராகலை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணையாளரும் பங்கேற்றார். அங்கு மொனராகலை மாவட்டத்தில் தேர்தல் விதிகள் மீறப்படுவது பற்றியும் அரச அதிகாரிகளின் கடப்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், ஊவா மாகாணத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள் உட்பட பல அரச உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மொனராகலை மாவட்டத்தில் அதிகரித்துவரும் தேர்தல் வன்முறைகளால் அந்த மாவட்டத்தின் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அண்மையில் வெளியாகியிருந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றார்.

1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகளின் தேர்தல் சட்டவிதிகளின்படி எதிர்பாராத நிகழ்வுகள் நடந்தால் அல்லது அவசர நிலையைக் கருத்திற்கொண்டு தேர்தலொன்றை ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது



# பயங்கரவாதத்தை ஒழிக்க ஆதரவு தரவேண்டும் அமெரிக்கா

## கோரிக்கை விடுக்கும் சிங்கள ராவய

பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிக்க இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு சிங்கள ராவய அமைப்பு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.


கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு நேற்றுமுன்தினம் காலை சென்ற சிங்கள ராவய அமைப்பு இது தொடர்பான மனுவொன்றை கையளித்தது.

பின்னர் அந்த அமைப்பின் தலைவர் அக்பீமன தயாரத்ன ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதனை மீண்டும் உயிர்ப்பிக்க சில சக்திகள் முயன்று வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்கா பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துளார்.

# அழகான பெண்களை இரசிப்பதுண்டு



அழகான பெண்களைப் பார்தது ரசிப்பதுண்டு என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அழகான் பெண்களைப் பார்த்தால் இரசிப்பதுண்டு. எனினும் அதனை மனதில் ஆழமாக போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை.

உங்களுக்கு தோன்றும் உணர்வுகள் எனக்கும் உருவாகும். காமம், ஆசை, இச்சை போன்ற உணர்வுகள் எனக்கும் ஏற்படுவதுண்டு ஏனெனில் நானும் மனிதனே.

எனினும் ஒரு விடயத்தில் மனதை ஒருநிலைப்படுத்துவதன் மூலம், இவ்வாறான இச்சைகளை கட்டுப்படுத்த முடிகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் பெண் ஒருவரை நெருங்கவோ, காதலிக்கவோ சந்தர்ப்பம் கிடையாது. இந்த உணர்வுகள் எல்லாம் செத்துப் போய்விட்டன.

ஒருபோதும் மது அருந்தியதோ, புகைப்பிடித்ததோ கிடையாது.

துறவறம் பூண்டதன் பின்னர் என்னைப் பல பெண்கள் காதலித்திருக்கின்றார்கள்.

இது ஓர் சாதாரண விடயமாகும். இவ்வாறான நிலைமைகளின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து பௌத்த மதத்தில் போதிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் யுவதியொருவர் என்னைத் தொடர்ச்சியாக பின் தொடர்ந்தார். பின்னர் அவர் என்னை காதலிக்கின்றார் என்பதை உணர்ந்தேன்.

பெண்களை எனது சகோதரி, தாய், மகள் போல நினைத்துக்கொள்ளுமாறு புத்தர் போதித்துள்ளார்.

துறவறம் பூணுவதற்கு முன்னதாக பெண்கள் பின்னால் சுற்றித்திரிந்திருக்கின்றேன்.

12, 13 வயது முதல் இவ்வாறு யுவதிகளின் காதலை பெற்றுக்கொள்ள முயற்சித்திருக்கின்றேன்.

பௌத்த பிக்குவாக மாறியதன் பின்னர் இந்த உணர்வுகள் தண்ணீரில் கரைவது போல கரைந்து போய்விட்டன.

பாடசாலை காலத்தில் நான் கலை இலக்கிய துறைகளில் சிறந்து விளங்கினேன்.


இதனாலேனும் ஒரு காதலி எனக்கு இருந்தார் எனச் சொல்ல முடியாது. பலர் என்னை நேசித்தார்கள் என்றார்.




வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையம் மீண்டும் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்தார். (48)

# ஊதியத்தையே நோக்காக கொள்ளாது சேவை நோக்குடன் பணியாற்ற வேண்டும்

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது சபையின் பணியாளர்களாக நியமனம் பெறும் நீங்கள் ஊதியத்திற்கு என்றில்லாமல் சேவை நோக்குடனும் அர்ப்பணிப்புடனும் மக்களுக்கு சேவையாற்ற உறுதி கொள்ளவேண்டும் என பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பிரதேசசபையில் இடம்பெற்ற அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது.

21 பேருக்கு நியமனம் வழங்க ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று அதற்கான நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

1200 பேர் வரை இந்நியமனங்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். அதிலிருந்து நீங்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். மக்கள் உள்ளூராட்சியின் சேவைகளை முழுமையாகப் பெறவில்லை. மக்கள் பிரதிநிதிகள் சபையில் எடுக்கின்ற தீர்மானங்களை மக்களிடத்தில் கொண்டு சென்று செயற்படுத்துவது சபையின் பணியாளர்களான நீங்கள்தான்.

எனவே நீங்கள் ஊதியத்திற்கு என்றில்லாமல் சேவை நோக்குடனும் அர்ப்பணிப்புடனும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமெனத் தெரிவித்தார்.

# காலாவதியான பொருட்கள் விற்பனை 46 வர்த்தகர்களிடம் தண்டம் அறவீடு

நுகர்வோரை ஏமாற்றுதல் மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல் 46 வர்த்தகர்களிடம் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்தசேகரன் நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 4 நீதிமன்ற எல்லைக்குட்பட்டவர்த்தக நிலையங்களில், கடந்த ஆகஸ்ட் மாதம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, 53 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

அவ்வர்த்தகர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 33 வர்த்தகர்களுக்கு 1 இலட்சத்து 56 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், நுகர்வோரை ஏமாற்றும் விதத்தில் செயற்பட்ட வர்த்தகர்களுக்கு 27 ஆயிரம் ரூபாவும், பொதி செய்யப்பட்ட பொருள்ளில், நிறைகுறைவு காணப்பட்ட வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபாவும், அதிக விலையில் விற்பனை செய்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபாவும், விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 6 வர்த்தகர்களுக்கு 15 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப் பணம் அறவிடப்பட்டதாகவும், நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத 7 வர்த்தகர்களுக்கான வழக்குகள் இம்மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி மேலும் [illegible]ரிவித்தார். (25)

# குறும்படப் போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

நல்லூர் பிரதேச கலாச்சாரப் பேரவை, பிரதேச மட்டத்தில் குறும்படப் போட்டியை நடாத்தவும், அது சார்பான 2014 ஆம் ஆண்டுக்கான விழாவையும் பெருமெடுப்பில் நடாத்த முன்வந்துள்ளது. தேர்வு செய்யப்படும் ஐந்து குறும்படங்களுக்கு பெறுமதியான பரிசில்களும், வெகுமதிகளும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் வாழும் கலைஞர்களையு, படைப்பாளிகளையும், தயாரிப்பாளர்களையும ஊக்குவிக்கும் நோக்கத்தில் நடாத்தப்படும் இப் போட்டிக்கு சமர்ப் பிக்கப்படும் குறும்படங்கள் சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகுள், கலாசாரப் பிறழ்வுகளை அகற்றி விழிப்புணர்வை ஏற்படுத் தும் அதி உச்ச அக்கறை கொண்டதாக அமைய வேண்டும்.

"சமகாலத்தில் அடையாளம் காணப்படும் பின்னடைவுகளையும், அவற்றை நிவர்த்திப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தலையும் வெளிப்படுத்தல் என்னும் கருப்பொருளில் ஆக்கப்படும் குறும்படங்கள் 10 முதல் 15 நிமிடங்கள் அடங்கியதாக அமையவேண்டும். ஒருவர் எத்தனை படங்களையும் அனுப்பலாம். ஒரு படத்தில் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் இதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி ஆகும் விண்ணப்பப்படிவத்தை நல்லூர் பிரதேசசெயலக கலாசாரப்பிரிவில் பெற்று அநதந்த பிரிவு கிராம உத்தியோகத்தர்களால் சிபார்சு செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும். (68)

# ஏ.வி.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் 'சிற்பச் செல்வன்' அமரர் ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல.15 றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதன் போது தொடக்கவுரையை யாழ் கல்வி வலய சித்திர பாட முதன்மை ஆசிரியர் ரி.துஷ்யந்தன் ஆற்றவுள்ளதுடன் சிற்பக் காட்சிக் கூடத்தினையும் திறந்து வைக்கவுள்ளார். தொடர்ந்து இக் கண்காட்சி எதிர்வரும் நவம்பர் மாதம 13 ஆம் திகதி வரை இரண்டு மாதங்களுக்கு நடைபெறவுள்ளது.

மரச் சிற்பங்களை செதுக்குவதில் ஈழத்தில் பிரபல்யம் மிக்கவராக விளங்கிய சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தன் கடந்த ஆண்டில் காலமானார் என்பதும் அவர் உயிருடன் வாழ்ந்த காலத்தில் 1997 காலப்பகுதியிலும் திருமறைக் கலாமன்றம் அவரது சிற்பக் கண்காட்சியை யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல பாகங்களிலும், வெளிநாடுகள் பலவற்றிலும் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்



(12.09.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 27 ஆம் திகதி.
சதுர்த்தி / அமிர்தசித்தயோகம்.
அச்சுவினி நட்சத்திரம் பின்னிரவு பின்பரணி வரை 12.54
இராகு காலம 10.33 - 12.03 வரை. சுபநேரம 06.03 - 07.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிள்ளைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு சேமிப்புக் கணக்கில் பணவரவு வைத்தல். தொழில் நிமித்தம் பொருட்கொள்வனவுக்கு பயணமாதல். |
| ரிஷபம் | செய்தொழில் பாரிய நட்டத்தை எதிர்நோக்குவதினால் பங்கில் சேரவைத்தல். கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக சகோதரர் மத்தியில் பிளவு ஏற்படல். |
| மிதுனம் | சுபகாரிய நிகழ்வுக்கு பணம்புரட்ட நண்பரை நாடுதல். நோய்குணமடைய தெய்வதலங்களுக்கு தீர்த்த யாத்திரை செய்ய முஸ்தீபு. |
| கடகம் | வியாபார நிலையத்தை இடம்மாற்ற முற்பட்டு அதற்குரிய நடவழக்கையில் ஈடுபடல். தாயாரின் தேகநலம் பாதிப்படைதல். |
| சிம்மம் | கொடுத்த கடனை மீளப்பெறுவதில் அலைச்சலும் மனத்தாங்கலும் ஏற்படல். ஆவணக்குறைபாட்டினால் காவலர்களினால் எச்சரிக்கை செய்யப்படல். |
| கன்னி | புதியமனை கட்ட எண்ணுதல். ஒழுக்கத்தை உயிரினதும் மேலாகக் கடைப்பிடித்ததால் துயர் விலகிவிடல். |
| துலாம் | தறிகெட்டுத்திரியும் பிள்ளைகளை எண்ணி ஆறாத கவலை ஏற்படல். இடமாற்றம் இரத்துச்செய்த செய்தி கேட்டு ஆனந்தமடைதல். |
| விருச்சிகம் | தொழில்வாய்ப்பு கிடைக்கலாம் பிதாமற்றும் சகோதரர்களின் உதவியும் ஒத்தாசையும் கிடைத்ததால் மகிழ்ச்சியடைதல். |
| தனுசு | செய்தொழிலில் போதிய கவனம் தேவை. கணக்கில் நம்பகத்தன்மை அற்றுப்போனதால் நியாயம் கேட்டுரகளை ஏற்படல். |
| மகரம் | தானதர்ம சிந்தனை வயப்பட்டதனால் பிறருக்கு உதவி செய்ய முன்வரல். காதில் ஏற்பட்ட நோயால் துன்பப்படல். |
| கும்பம் | தொடர்கவலைகள் வாட்டுவதினால் விரக்தியும் பற்றற்ற நிலையும் தக்கவைத்தல். பொருள் இழப்பு ஏற்பட்டதினால் வேதனையும் பதட்டமும் ஏற்படல். |
| மீனம் | உதவப்போய் சங்கடநிலை ஏற்படல். எதிர்பார்த்த உதவி பொறுத்த நேரத்தில், கைகொடுத்ததினால் மகிழ்சசியடைதல். |

# களத்திற்கு வெளியில்...

அமெரிக்க் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்ல வேண்டும் என்ற எனது கனவு நனவாகியிருக்கிறது. பயிற்சியாளர் கோரன் உள்ளிட்ட பயிற்சி குழுவினர் எனக்கு சிறப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். எனது வாழ்க்கையில் சிறந்த ஆட்டத்தை இந்தப் போட்டியில் வெளிப்படுத்தியதாக நினைக்கிறேன். எனது கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைத்து இருக்கிறது.

**மரின் சிலிச் (குரோஷியா)**

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்று சாதனை படைக்க வேண்டும் என்று விரும்பினேன். அது. முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. சிலிச் உண்மையிலேயே சிறப்பாக விளையாடினார். எனது ஆட்டத்தை நான் முழுமையாக ஆடவில்லை. இது கடினமான தோல்வியாகும். இருப்பினும் முதல் இறுதிப்போட்டியில் விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு நாட்டுக்குப் பெருமை சேர்ப்பேன்.

**நிஷிகோரி (ஜப்பான்)**

பரிசோதனை முடிவு எனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. அதற்காக நான் நம்பிக்கையை இழந்து விடமாட்டேன். தடை எனக்கு ஒரு பெரிய பிரச்சினையாக தெரியவில்லை. எனது முழங்கை அனுமதிக்கப்பட்ட 15 டிகிரிக்கு மேலாக வளைவதாக கூறி, பந்து வீச தடை விதிக்கப்பட்டிருக்கிறது அவ்வளவு தான். அதை என்னால் திருத்திக் கொள்ள முடியும். உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று அதில் எனது அணி சிறப்பாக செயற்படுவதைக் காண வேண்டும் என்பதே எனது கனவு. நான் போராட்ட குணம் கொண்டவன். உலக கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன்பாக சர்வதேச கிரிக்கெட்டுக்குள் திரும்ப என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவேன்.

**சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்)**

எதிர்வரும் மேற்கிந்தியதீவுகள் அணிக்கெதிரான தொடருக்கு முன் ஹோலிக்கு கொஞ்சம் இடைவெளி உள்ளது. சம்பியன்ஸ் லீக்கில் அவரது அணி இல்லை. இந்தக் கால அவகாசத்தை இங்கிலாந்தில் அவர் செய்த தவறுகளை சரி செய்து கொள்ள பயன்படுத்திக் கொள்வது நலம். ஹோலி கடினமாக உழைக்கும் ஒரு இளம் வீரர், அவர் மீண்டும் எழுச்சியுறுவார் என்பதில் எனக்கு எந்த வித சந்தேகமும் இல்லை. அவுஸ்ரேலிய ஆடுகளம் ரோகித் சர்மாவின் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருக்கும். இதற்கு முன்பு அவர் அவுஸ்ரேலியாவில் அனுபவமற்ற வீரராக களமிறங்கிய போதே 2007ஆம் ஆண்டு சிறப்பாக விளையாடினார். அவரது துடுப்பாட்டப் பாணி அவுஸ்ரேலிய ஆடுகளங்களுக்கு மிகவும் பொருத்தமானது. ஆகவே நான் ரோகித் சர்மா ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்குவதையே ஆதரிக்கிறேன்.


**வீ.வி.எஸ். லக்ஸ்மன் (இந்தியா)**

நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்கு விளையாட அழைப்பு வந்தது உண்மைதான், முதலில் குடியுரிமை பெற்றுத் தருகிறோம் என்றார்கள். பின்னர் படிப்படியாக நியூசிலாந்து அணியில் இடம்பிடிக்கலாம் என்று உறுதி அளித்தனர். எனக்கும் இங்கு சில ஏமாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் நியூசிலாந்து அழைப்பை ஏற்கலாம் என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். எமக்கு எங்கு அங்கீகாரம் இருக்கிறதோ அதைத் தேர்வு செய்ய வேண்டியதுதானே. ஆனால் நான் நிறைய யோசித்தேன் கடைசியில் நாட்டிற்கு முன்னுரிமை அளிக்க முடிவெடுத்தேன். சமீபத்தில் எனக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையில் கசப்புணர்வு இருந்தது உண்மைதான். இப்போது நான் அதைக் கூறமாட்டேன், கிரிக்கெட் ஆட்டத்தை விட்டு விலகும் போது சரியான தருணத்தில் அதனை வெளிப்படுத்துவேன்.

**திசர பெரேரா (இலங்கை)**

மிகவும் சுவாரஸ்யமான ஒரு சுழற்பந்து வீச்சாளர் என்றால் எனக்கு முதலில் நினைவுக்கு வருவது முத்தையா முரளிதரனே. அவரது பந்து வீச்சை விபரிப்பது அவ்வளவு சுலபமல்ல. முரளிதரன் ஒரு வினோதமான பந்துவீச்சாளர். இவரது பந்து வீச்சு முறை குறித்து சர்ச்சைகள் இருந்தாலும், சுழற்பந்து உலகின் தலை சிறந்த பந்துவீச்சாளர் அவர். அவரது பந்துகள் பல முறையற்றவை என்று கருதப்பட்டன. ஆனால் 800 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவரது பந்து வீச்சின் அனுகூலங்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். அவரது பந்து வீச்சு முறை முற்றிலும் வேறுபட்டது. முழுதும் மணிக்கட்டைப் பயன்படுத்தும் ஒரு பந்து வீச்சு. அவர் பற்றி கூறும்போது அவர் பந்துகளை பயங்கரமாகத் திருப்பக் கூடியவர் என்பதே பிரதானமாக இருந்து வருகிறது. மேலும் அவர் பல்வேறு விதமான பந்து வீச்சுகளை வைத்துள்ளார் (தூஸ்ரா, லெக்ஸ்பின்). ஆனால் அது ஒரு திறமைதான் என்றாலும், அவரிடம் நான் காண்பது ஓப் ஸ்பின், ஓப் பிரேக் வகையிலேயே அவரால் தினுசு தினுசாக வீச முடிகிறது என்பதே. லெந்த், பிளைட், லூப் என்று அவரது கலவை அசத்தக்கூடியது. எனவே அவர் தூஸ்ரா, லெக்ஸ்பின் என்று மாற்ற வேண்டிய அவசியமில்லை. அவரது ஓப் பிரேக், ஓ.்.ப் ஸ்பின்னிலேயே அவ்வளவு வகைகள் உள்ளன. மேலும் விக்கெட்டுக்கள் எடுப்பதே குறிக்கோள் என்பதை அவர் அறிவிக்கும் விதமாக வீசுவதை முதன் முதலில் அறிவித்த பந்துவீச்சாளர் என்றே நான் கருதுகிறேன்.

**பிரசன்னா (இந்தியா)**



# பந்துவீச்சில் சந்தேகம்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல்-அமின் உசைன் பந்து வீச்சு சந்தேகத்துக்கு உரியதாய் இருப்பதாக போட்டி நடுவர்கள் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் அங்கீகாரம் பெற்ற கார்டிப் அல்லது பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் மையத்தில் 21 நாட்களுக்குள் அல்-அமின் உசைன் ஆஜராகி பந்து வீச்சு சோதனைக்கு தன்னை உட்படுத்த வேண்டும். இந்த சோதனையின் முடிவை பொறுத்தே அவர் தொடர்ந்து பந்து வீசுவது குறித்து முடிவு செய்யப்படும்.

கடந்த யூன் மாதத்திலிருந்து நடுவரின் புகாருக்கு உள்ளாகும் 6ஆவது வீரர் அல்-அமின் உசைன் ஆவார். ஏற்கனவே சேனநாயக்க (இலங்கை), வில்லியம்சன் (நியூசிலாந்து), உத்செயா (சிம்பாப்வே), சோஹக் காஜி (பங்களாதேஷ்), சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்) ஆகியோர் புகாரில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சயிட் அஜ்மல் விவகாரம் கிரிக்கெட் சபை கைவிரிப்பு

(இஸ்லாமாபாத்)

பந்தை எறிவதாக குற்றம்சாட்டப்பட்டு சர்வதேச போட்டிகளில் பந்துவீச தடை விதிக்கப்பட்டுள்ள சயிட் அஜ்மல் விவகாரத்தில், மேல்முறையீடு செய்வதாக கூறியிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திடீரென பின்வாங்கியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மலின் பந்துவீச்சு சர்ச்சைக்குரிய முறையில் இருப்பதாக, இலங்கை சுற்றுப்பயணத்தின் போது நடுவர்கள் புகார்கள் செய்தனர். அதன் அடிப்படையில், அவரது பந்துவீச்சை ஆய்வு செய்த சர்வதேச கிரிக்கெட் சபை, அனுமதிக்கப்பட்ட 15 டிகிரி கோணத்துக்கும் அதிகமாக முழங்கை வளைவதாக கூறி, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க அஜ்மலுக்கு தடை விதித்தது.

அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் அவுஸ்ரேலியா-நியூசிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ள நிலையில், அஜ்மல் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால், இது குறித்து ஐ.சி.சி.யிடம் மேல்முறையீடு செய்யப் போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் சஹாரியார் கான் கூறியிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அவர் திடீரென தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார். அவர் விடுத்த அறிக்கையில், பாகிஸ்தான் கிரிக்கெட் . சபையின் பந்துவீச்சு ஆய்வு சபை இந்த விவகாரத்தை முதலில் ஆய்வு செய்ய வேண்டும், அதன் முடிவை பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படும் என கூறியுள்ளார்.

மேலும், பாகிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர்கள் அனைவரின் பந்துவீச்சு முறைகள் குறித்தும் ஆய்வு சபை பரிசோதிக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார். கிரிக்கெட் சபையின் இத்தகைய முடிவால், அஜ்மல் உலக கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடுவது பெருத்த சந்தேகமாகி உள்ளது.

### சம்பியன் லீக் ருவென்ரி-20

# நாளை ஆரம்பம்

6ஆவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் நாளை முதல் ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தகுதி சுற்று ஆட்டம் நாளை முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. முதன்மை சுற்று 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஹைதராபாத், சண்டிகார், ராய்ப்பூர், பெங்களூர் ஆகிய இடங்களில் போட்டி நடைபெறுகிறது.

முதன்மை சுற்றில் 10 அணிகள் விளையாடும். இதில் 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. 2 அணிகள் தகுதி சுற்று மூலம் நுழையும். இந்த 10 அணிகளும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் ஐ.பி.எல். சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர்கிங்ஸ், பெர்த் ஸ்கோர்செர்ஸ் (அவுஸ்ரேலியா), டொல்பின்ஸ் (தென்னாபிரிக்கா), குவாலிபையர்-1 ஆகிய அணிகளும் பி பிரிவில் கிங்ஸ்லெவன் பஞ்சாப், ஹோபர்ட் ஹரிகோனஸ் (அவுஸ்ரேலியா) கேப் கோப்ராஸ் (தென்னாபிரிக்கா) பார்படோஸ் டிரைடென்ஸ் (மே.தீவுகள்), குவாலிபையர்-2 ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

தகுதி சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், சதர்ன் எக்ஸ்பிரஸ் (இலங்கை), நொர்தன் டிஸ்டிரிக்ஸ் (நியூசிலாந்து), லாகூர் லயன்ஸ் (பாகிஸ்தான்) ஆகிய 4 அணிகள் விளையாடுகின்றன. இதில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் முதன்மை சுற்றுக்கு முன்னேறும்.

இதன் அரையிறுதி ஆட்டங்கள் ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஹைதராபாத்திலும், இறுதி போட்டி ஒக்ரோபர் 4ஆம் திகதி பெங்களூரிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நட்பு கால்பந்து வென்றது பிரேசில்

(நியூஜெர்சி)

ஈகுவடோர் அணிக்கெதிரான நட்புறவு கால்பந்துப் போட்டியில் பிரேசில் அணி அபார வெற்றிபெற்றது.

பிரேசில்- ஈகுவடோர் அணிகளுக்கிடையிலான நட்புறவு கால்பந்து ஆட்டம் அமெரிக்காவில் உள்ள நியூஜெர்சியில் நடைபெற்றது. இதில் முதல் பாதியில் பிரேசில் வீரர் வில்லியன் கோல் அடித்தார். அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சி எதுவும் கைகொடுக்கவில்லை. 47ஆவது நிமிடத்தில் பிரேசில் கப்டன் நெய்மர் கோல் அடிக்க கிடைத்த அருமையான வாய்ப்பை தவறவிட்டார். முடிவில் பிரேசில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஈகுவடோரை தோற்கடித்தது. டுங்கா பயிற்சியில் பிரேசில் அணி பெற்ற 2ஆவது வெற்றி இதுவாகும். ஏற்கனவே கொலம்பியா அணியை தோற்கடித்திருந்தது. பிரேசில் அணி தனது அடுத்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை சந்திக்கிறது. இந்த ஆட்டம் பீஜிங்கில் ஒக்ரோபர் 11ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழகிகளை வைத்து வீரர்களை மயக்கத் திட்டம்

## நியூசிலாந்து பொலிஸ் எச்சரிக்கை

(ஹமில்டன்)


உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது, அழகிகளை வைத்து கிரிக்கெட் வீரர்களை மயக்கி சூதாட்டத்தில் ஈடுபடுத்த தரகர்கள் திட்டமிட்டுள்ளதாக நியூசிலாந்து பொலிஸார் எச்சரித்துள்ளனர். அடுத்த ஆண்டு உலக கிண்ண கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

சமீபத்தில், நியூசிலாந்து வீரர்கள் வின்செண்ட், கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பரபரப்பு ஏற்பட்டது. இதனால், உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது சூதாட்டப் புகார்கள் எழாமல் இருக்க நியூசிலாந்து பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது குறித்து, உலக கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் பாதுகாப்புக்கான பொலிஸ் உயர் அதிகாரி சான்ட்ரா மான்டர்சன் அளித்த பேட்டியில், அழகிகளை வைத்து வீரர்களை மயக்க சூதாட்ட முகவர்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் வீரர்களை மயக்க புகைப்படம் எடுத்து, அதன் மூலம் வீரர்களை சூதாட்டத்தில் ஈடுபடுத்த கட்டாயப்படுத்துவார்கள். எனவே வீரர்கள் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என கூறியுள்ளார்.

# தேசியத்தில் வென்றவர்களுக்கு பாராட்டு

## விழாக் கோலம் பூண்டது பருத்தித்துறை



(பருத்தித்துறை)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 9ஆம் திகதி பாடசாலை சமூகத்தினால் சிறப்புற நடாத்தப்பட்டது.

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான கபடிப் போட்டி கடந்த 5,6,7ஆம் திகதிகளில் அம்பாறையில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை அணி இறுதி வரை தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றுவதற்காகப் போராடியபோதிலும் வெள்ளிப் பதக்கத்தையே கைப்பற்றிக்கொண்டது.

தேசியத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து நகர் வழியாக ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, பாண்ட வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்பட்டதுடன் தேவாலயத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. பின்னர் பாடசாலைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் பாராட்டு விழா இடம்பெற்றது.

பருத்தித்துறை சென்.தொம்மையர் தேவாலயத்தில் வணக்கத்திற்குரிய அருட் தந்தை மௌலீஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை நகராட்சி மன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் மார்க்கு மனுவல், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் அ.பிரான்சிஸ் ரட்ணகுமார், கிராம சேவகர் தயாநிதி, வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் வ.அருள்தாஸ் மற்றும் ஆசிரியர்கள் பொது அமைப்புக்களின் நிர்வாகத்தினர் என பலர் கலந்து கொண்டனர்.



இப்பாராட்டு நிகழ்வில் உரையாற்றிய பருத்தித்துறைபிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இப்பாடசாலை இயங்குகிறது. ஆயிரம் தேசிய ரீதியில் 23 அணிகள் கபடி விளையாட்டில் போட்டியிட்டிருந்தும் எமது மாணவர்கள் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

எமது சென். தோமஸ் விளையாட்டுக் கழக வீரர்களும் பல போட்டிகளில் முதலாம் இடத்தையே தக்க வைத்து வருகின்றனர். 15 வயதிற்குட்பட்ட இம் மாணவர்களும் தமது விளையாட்டு நுட்பத்தாலும் ஆற்றலாலும் வெற்றி வாகை சூடியுள்ளனர். குறிப்பாக வடமராட்சி பருத்தித்துறை மண்ணின் மகிமையை தென்னிலங்கையில் நிலைநாட்டி வெற்றியுடன் வந்திருக்கும் வீரர்களைப் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம். மேலும் இதேபோன்று பல்வேறு துறைகளிலும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும். எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துத் தந்த வீரர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# இணுவிலில் நாளை மென்பந்து கிரிக்கெட்

(இணுவில்)

இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகம் நடாத்தும் கணேஸ்வரியம் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை முதல் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அணிகள் இன்று மாலைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் 0772208285 அல்லது 0775944827 அல்லது 0770740085 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அத்துடன் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் மற்றும் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளன. (93)

# அரச அதிபர் கிண்ணம் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் வருடா வருடம் நடாத்தப்படும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் கரவெட்டி இமையாணன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இப்போட்டியில் 15 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஒவ்வொரு பிரதேச செயலக பணியாளர்கள் அணியும் மக்கள் சேவைகளைப் பாதிக்காத வகையில் நாளாந்தம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளனன. கடந்த ஆண்டு நடைபெற்ற அரச அதிபர் வெற்றிக் கிண்ண இறுதி ஆட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஜேம்ஸ், செல்டன் அதிரடி ஆட்டம் அரையிறுதியில் சென்றலைட்ஸ்





(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்திய பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் செல்டன் மற்றும் ஜேம்ஸ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். சென்றலைட்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் முதலிடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இச்சுற்றுப் போட்டியின் முதல் ஆட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். சென்றலைட்ஸ் அணியும் வவுனியா நொதன் ஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற் கமைய முதலில் ஆடிய வவுனியா நெதன் ஸ்ரார் அணி மயூரன், மதுஷென் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வவுனியா நெதன் ஸ்ரார் அணி 40.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகாஷ் 39, ஜெயகரன் 28, யசோதரன் 24, சூரியா 21, இளங்குமரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன், மதுஷன் ஆகியோர் தலா மூன்று, டர்வின் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 168 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி ஜேம்ஸ், செல்டன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம், இலகுவாக வெற்றிபெற்றது.

இறுதியில் சென்றலைட்ஸ் அணி 29.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெம்ஸ் ஐந்து சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 66, செல்டன் மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 54, வினோத் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரூபன் மூன்று, விதுஷன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இரண்டாவது சுற்றில் வெற்றிபெற்ற யாழ். சென்றலைட்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதிப் போட்டி நாளை அம்பாறையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்




அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் ச.சஜீவனின் நிதியுதவியுடன் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**4** - சுப்பராஜன் [வானவில் இதழ்]



1971 ஏப்பிரல் கிளர்ச்சியில் தோல்வியுற்ற பின்னர் சரணடைந்த ஜே.வி.பியினரது இளம் உறுப்பினர்கள்

ஜே.வி.பி.யின் பிரதான இலக்கு பொலிஸ் நிலையங்களாகவே இருந்தன. அரசு இயந்திரத்தின் பிரதான அங்கம் ஆயுதப்படைகள்தான் என்ற மார்க்சிய தத்துவத்தைப் படித்திருந்த விஜேவீர, அதிலும் ஆயுதப்படைகளிலும் இராணுவம்தான் பிரதானமான்து என்பதை எப்படி மறந்தார் என்பது புரியவில்லை.

அதுமட்டுமல்ல, அவர் முதலாளித்துவ அரசு இயந்திரம் குறித்து சிறுபிள்ளைத்தனமான புரிந்துணர்வைக் கொண்டிருந்தார் என்பதற்கு ஒரு உதாரணம், நாட்டின் ஏனைய பகுதிகளில் தனது இயக்கம் தாக்குதலை நடாத்த, தலைநகர் கொழும்பை இலங்கை அரச இயந்திரத்தின் பிரதான அங்கமான இராணுவம் கைப்பற்றித் தம்மிடம் ஒப்படைக்கும் என்று நம்பியிருந்ததுதான்.

முதலாளித்துவ அரசின் இராணுவம் நாட்டைக் கைப்பற்றுவது என்பது, இராணுவச் சதியே தவிர மக்கள் புரட்சி அல்ல என்பது ஜே.வி.பி.இற்குத் தெரியவில்லையா அல்லது அவர்களும் ஒரு சதி நடவடிக்கையின் மூலம்தான் ஆட்சியைக் கைப்பற்றலாம் என நம்பியிருந்தார்களா என்பது தெரியவில்லை.

ஆரம்பத்தில் ஜே.வி.பியின் தாக்குதலால் அரசாங்கம் நிலைகுலைந்தது போலத் தோன்றினாலும், விரைவிலேயே அரசு தன்னைச் சுதாரித்துக்கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மாகோவிலும் கேகாலையிலும் மட்டுமே ஜே.வி.பி.யினர் பொலிஸ் நிலையங்களை ஒரு கிழமை வரையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இந்தக் கிளர்ச்சியின் போது சுமார் 6,000 வரையிலான ஜே.வி.பியினர் கொல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் சரியான தொகையை ஜே.வி.பி., அரசாங்கம் உட்பட எந்தவொரு அமைப்பும் இதுவரை சரியாகக் கணக்கிட்டதாகத் தெரியவில்லை.

(ஜே.வி.பி 1988-89 கால கட்டத்தில் மேற்கொண்ட இரண்டாவது கிளர்ச்சியின் போது தலைவர் விஜேவீர மற்றும் உயர்மட்டத் தலைவர்கள் உட்பட சுமார் 60,000 பேர் வரை பிரேமதாச அரசாங்கத்தால் கொன்று குவிக்கப்பட்டனர்!).

ஜே.வி.பியின் 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியை அடக்குவதற்காக சிறீமாவோவின் அரசாங்கத்துக்கு அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி ஹெலிகொப்ரர்களையும், சில இராணுவ வீரர்களையும் உடனடியாகவே அனுப்பி வைத்தார்.

இந்தக் கிளர்ச்சிக்கு வட கொரியா ஜே.வி.பி.இற்கு ஆயுதங்கள் வழங்கியதாக ஒரு கட்டுக்கதையை ஐ.தே.கவும், அரசாங்கத்தினுள் இருந்த வலதுசாரிகளும் அவிழ்த்துவிட்டனர். அந்த நேரத்தில் தண்ணீர் எடுப்பதற்காக கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த ஒரு வட கொரியக் கப்பலே ஆயுதங்களைக் கொண்டு வந்ததாக வதந்திகள் பரப்பினர்.

அதற்கு இன்னொரு காரணம் ஜே.வி.பியினர் கொழும்பிலிருந்த வட கொரியத் தூதரகத்திடமிருந்து சில திரைப்படங்களைப் பெற்று அதைத் திரையிட்டுத் தமது பிரசாரத்துக்குப் பயன்படுத்தியிருந்தனர்.

இன்னொரு பக்கத்தில் சீனாவையும் இந்தக் கிளர்ச்சியில் சம்பந்தப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. விஜேவீர ஆரம்பத்தில் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததால் இந்தப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது எனக் கருதப்பட்டாலும், இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டது.

அதன் காரணமாக சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசன், அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஆரியவன்ஸ குணசேகர, மலையக தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கத் தலைவர்களில் ஒருவரான ஓ.ஏ.இராமையா உட்படப் பலரைப் பொலிசார் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்தனர். வேறு பலரைத் தேடியும் வந்தனர்.

ஆனால் ஜே.வி.பி.யின் கிளர்ச்சி ஒரு எதிர்ப்புரட்சி நடவடிக்கை எனக் கண்டித்து சீனப் பிரதமர் சூ என் லாய் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததுடன், அந்த நேரத்தில் இலங்கைக்கு உதவும் பொருட்டு 15 கோடி ரூபாவை வட்டி இல்லாக் கடனாகவும் வழங்கியது.

இந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்குள் இருந்த வலதுசாரி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையிலான ஒரு குழுவினர் சிறீமாவோவை பதவியிலிருந்து இறக்கி விட்டு ஆட்சியைக் கைப்பற்றவும் திட்டமிட்டிருந்தனர். அவர்கள், "இந்த நெருக்கடியான நேரத்தில் சிறீமாவோ போன்ற ஒரு பெண்மணியால் நாட்டை நிர்வகிக்க முடியாது. பீலிக்ஸ் போன்ற உறுதியான ஒருவர்தான நாட்டை நிர்வகிக்கத் தகுதியானவர்" என்ற பிரசாரத்தை முடுக்கி விட்டனர்.

ஆனால் சிறீமாவோ தலைமையிலான முற்போக்கு சக்திகள் அதற்கு இடம் கொடாமல் அந்த முயற்சியை முறியடித்து விட்டனர்.

உண்மையில் விஜேவீர தன்னை மார்க்சிஸ - லெனினிஸவாதி என்று சொல்லிக்கொண்டாலும், அவர் இரண்டு விதமான சக்திகளால் பயன்பட்டிருக்கிறார் என்பதே உண்மை. விஜேவீர சோவியத் யூனியனில் இருந்து திரும்பித் தனது ஜே.வி.பியைத் தொடங்கிய காலம் இலங்கையிலும் உலகம் முழுவதும் சோவியத் அதிபர் குருசேவின் நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்து, மாஓசேதுங் சிந்தனை எல்லோரையும் தீவிரமாக ஆகர்சித்திருந்த காலம்.

அதை முறியடிப்பதற்காக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி விஜேவீரவைப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதற்கான சில சான்றுகள் உள்ளன.

(தொடரும்)

# அப்பாவின் கையெழுத்து!



தாயாரின் அரவணைப்பு இல்லாததால் பொள்ளாச்சியில் பெரிய தகப்பனார் இல்லத்தில் தங்கிப் படிக்கும்படி நேரிட்டது. பள்ளியில் நடக்கும் ஆண்டு விழா நாடகங்களில் சிறு வேடங்கள் ஏற்று நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.

அந்தச் சமயத்தில்தான் மதுரை ஸ்ரீபால ,ஷண்முகானந்த சபா என்ற பெயரில் சிறுவர்களைக் கொண்ட குழு ஒன்று பொள்ளாச்சியில் நாடகம் போட்டுக் கொண்டிருந்தது. இதே குழுதான் பின்னர் டி.கே.எஸ் நாடக சபா என்ற பெயரில் பல சமுதாய, சரித்திர, நாடகங்களை நடத்திப் பிரபலமாக இருந்து வந்தது. அந்தக் குழுவினர் நடத்திய "அபிமன்யூ சுந்தரி" என்ற நாடகத்தில் டி.கே.சண்முகம் அபிமன்யுவாகத் தோன்றித் துடிப்பாக வசனம் பேசி நடித்து மக்களின் கரவொலியைப் பெற்றபோது நாமும் இந்தக் குழுவில் சேர்ந்து நடித்தால் நம்மையும் பாராட்டுவார்களே என்ற ஆசை என் மனதில் வேர்விட்டது. அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். பொள்ளாச்சியிலிருந்து குழு கோவைக்கு முகாமை மாற்றிய போது என்னுடைய புதிய ஆங்கிலப் புத்தகத்தை ஆறணாவுக்கு விற்றுவிட்டு வீட்டுக்குத் தெரியாமல் கோவைக்கு ரயில் ஏறி விட்டேன்!

அடுத்த நாள் நாடகக் குழு நிர்வாகி திரு.காமேஸ்வர அய்யரைப் பார்த்து என் ஆசையை வெளியிட்டபோது அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அவ்வளவு சுலபமாக உன்னைச் சேர்த்துக்கொள்ள முடியாது. ஒன்று உன் பெற்றோர் நேரில் வரவேண்டும் அல்லது கடிதமாவது கொடுக்க வேண்டும்" என்றார் கறாராக! கடிதம் வாங்கி வருவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டேன். அப்பாவிடம் நாடகக் கம்பெனி பேச்சை எடுத்தால் என்ன நடக்குமென்று எனக்குத் தெரியும். ஒரு முடிவுக்கு வந்தேன். என் தகப்பனார் எழுதுவதுபோல் ஒரு கடிதத்தை எழுதி மனேஜரிடம் சேர்த்தேன். அவர் பார்வை என்ன்ன நம்பவில்லை என்பதைச் சொல்லியது! "இது உன் அப்பா கையெழுத்தா?"

என்று கேட்டார். "ஆமாம்" என்று அடித்துச் சொல்லி விட்டேன்! அவர்களோடு தங்க அனுமதி கிடைத்தது.

மறுநாள் மாலை மூன்று மணியிருக்கும். இன்னொரு உறவினரோடு அப்பாவை நாடகக் குழு இருந்த இடத்தில் பார்த்ததும் என் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது! மனேஜர் ஆள் மூலம் அப்பாவுக்குத் தகவல் அனுப்பி வரவழைத்திருக்கிறார்! இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்புவது? நாங்கள் தங்கியிருந்த இடத்துக்குப் பின்னால் ஒரு பெரிய கேணி. உள்ளே படிக்கட்டுகள். அதில் இறங்கி ஒளிந்து கொண்டேன். சமையல் உதவியாளர் ஒருவர் இதைப் பார்த்துச் சொல்லிவிட்டார்! மனேஜர் முன்னிலையில் அப்பா கேட்டார்: "படிப்பா? நாடகமா?"


"நாடகம்தான்" என்று தயங்காமல் சொன்னேன்! "தலை எழுத்துப்படி நடக்கட்டும்!" என்று ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்! இப்போது நான் மதுரை ஸ்ரீபால ஷண்முகானந்தா சபாவில் ஒரு நடிகன்!

**('திரும்பிப் பார்க்கிறேன்' நூலில் எஸ்.வி.சஹஸ்ரநாமம்).**

# வெளிச்சத்தில்

ஒருவர் நீச்சல் போட்டியில் பதக்கம் வென்றார் என படத்துடன் செய்தி வருகிறது என வைத்துக் கொள்வோம். ஒரு ஆயிரம் பேர் அவரை அழைத்து வாழ்த்துவார்கள். ஆனால் அவர்கள் ஜென்மத்தில் நீச்சல் போட்டியை பார்க்க மாட்டார்கள். அதன் பிறகு அவர் எப்படி நீந்துகிறார், அவர் என்ன ஆனார் எனவும் கவலைப்பட மாட்டார்கள். அவர்களுக்கு அவரைப்பற்றி அக்கறை இருக்காது. பதக்கம் மீது தான் அக்கறை. பதக்கம் என்றால் வெற்றி. வெற்றி என்றால் மீடியா உருவாக்கும் ஒரு பிம்பம். அதை வாழ்த்த வேண்டும்.


பிறருக்கு எப்படியோ தெரியவில்லை. எனக்கு இதெல்லாம் அபத்தமாக தெரிகிறது. எனக்கு என ஒரு சின்ன உலகம் உள்ளது. அதற்குள் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அந்த உலகம் என்றும் எனக்கு உண்மையானது. ஆனால் மீடியா உருவாக்கும் போலி வெளிச்சம் என்னை




களைப்பூட்டுகிறது.

ஊடகங்களுடன் இன்று ஒரு எழுத்தாளன் நல்லுறவை பேண

# முட்டாள்களின் தேசத்தில்



முன்னொரு காலத்தில் ஒருவர், தன் தேசத்தை விட்டு வழி மாறிப் போய் முட்டாள்களின் தேசம் என்று அழைக்கப்பட்ட வேறொரு தேசத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கு அவர் தங்கியிருந்த போது, ஒரு திசையிலிருந்து மக்கள் பீதியில் அலறியடித்தபடி ஓடி வருவதைக் கண்டார். "என்ன விஷயம்?" என்று அவர் கஜளக் கேட்டதற்கு, கோதுமை அறுவடை செய்யப் போன இடத்தில் ஒரு இராட்சசனைப் பார்த்ததாக அம் மக்கள் கூறினர்.

அதைக் கேட்டு விட்டு, அவர்கள் "இராட்சசன்" என்று சொன்னதைப் பார்த்த போது, அது ஒரு தர்ப்பூசணிப் பழமாய் இருக்கக் கண்டார் அம் மனிதர்.

அம் மக்களின் நலனுக்காக தான் அந்த இராட்சசனை கொல்வதாகக் கூறினார் அவர்.

அவர் தர்ப்பூசணியை அதன் தண்டிலிருந்து துண்டித்தார். அதன் ஒரு பகுதியை நறுக்கி சாப்பிட ஆரம்பித்தார்.

அதனைக் கண்ட மக்கள், தர்ப்பூசணிப் பழத்தைப் பார்த்து பயந்ததைவிட, இப்போது அவரிடம் அதிகம் பயங்கொள்ள ஆரம்பித்தனர்.

"அவனை விரட்டி விடாவிட்டால், தர்ப்பூசணியை சாப்பிட்ட மாதிரியே அந்து அவன் நம்மைக் கொன்று விடுவான்" என்று சொல்லி அம் மனிதனை பெரிய கம்புகளால் அடித்து விரட்டி விட்டனர்.

அதே போல், இன்னொரு சமயத்தில் இன்னொரு மனிதன் முட்டாள்களின் தேசத்திற்கு போய்ச் சேர்ந்தார். அவருக்கும் முன்பு நடந்ததைப் போலவே கதி ஏற்பட்டது.

ஆனால், அவரோ "இராட்சசன்" விஷயத்தில் மக்களுக்கு உதவுவதாகக் கூறவில்லை.

"அது ஆபத்தானது" என்று மக்கள் சொன்னதை அவர் ஒத்துக் கொண்டார்.

அவர்களுடன் சேர்ந்து அவரும் "அதனிடமிருந்து" ஒதுங்கிக் கொண்டார். அதனால், அவரின் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறந்தது. இரண்டாவதாக வந்தவர், அம் மக்களுடன் இரண்டறக் கலந்தார். அவர்களுடன் தனியாகவும், வீடுகளுக்குச் சென்றும் அதிக நேரம் செலவிட்டார். அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார்.

தர்ப்பூசணிப் பழத்தைப் பற்றி அவர்கள் சிறிது சிறிதாக அடிப்படை யான அறிவைப் பெற்று, அதனைக் குறித்து பயம் போகும் வரையிலும் - ஏன், அவர்கள் தர்பூசணியை தோட்டங்களில் நட்டுப் பராமரிக்கும் அளவிற்குத் தேறும் வரையில், அம் மக்களுடன் கலந்திருந்தார் அவர்.

# மூட்டுவலியை விரட்ட...



மூட்டு வலி வராமல் இருக்க தினமும் 6000 அடிகளை யாவது நம் கால்கள் எடுத்து வைக்கவேண்டும் என்கிறது Arthritis Care and Research அமைப்பு.

சராசரியாக மனிதன் 3250 - 3700 அடி எடுத்து வைக்கிறான். அதுமட்டுமல்ல, ஒரு மனிதன் தொடர்ந்து ஒரு நிமிட நேரம் நடந்தால் 100 அடி எடுத்து வைப்பதாகவும் கணக்கிட்டுள்ளனர்.

இதன்படி ஒரு மணிநேரம் நடந்தால் 6000 அடிவந்துவிடும். இந்த அடிகளில் பாத்ரூம் சென்று... திரும்புவதையும் சேர்த்துக் கொள்ளலாம். இப்படி 6000 அடி வைத்தால் பிறகு நிற்பதோ, நடப்பதோ அல்லது படியேறுவதோ கஷ்டமாக இருக்காதாம். ங்கள் எத்தனை அடி எடுத்து வைக்கிறீர்கள்?

# நிற்பதில் உள்ள ஆபத்து!

வேண்டும். நானும் பேண முயல்கிறேன். ஆனால் ஊடகம் ஒரு பொறி. அதில் மாட்டிவிடக்கூடாது என தெளிவாக இருக்கிறேன். என் எழுத்தாள நண்பர் ஒருவர் ஒரு படத்தில் நடித்தார். அதன் மூலம் கோடிக்கணக்கான பார்வையாளர் களின் கவனத்தில் விழுந்தார். அடுத்து அவர் ஒரு மாதமாக தொடர்ந்து தன் சினிமா பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அடுத்து பல படங்களில் நடிக்கப் போவதாய் கூறினார். சினிமாவுக்கு வசனம் எழுதிக் கொண்டிருப்பதாய் கூறினார். ஆனால் அவரது பிரதான உண்மையான அடையாளம் எழுத்து. அதை விட்டு விட்டார்.

கடற்கரையில் சில பிரபலங்கள் நடிகர்கள் நடைபயிற்சி பண்ணுவதை பார்த்திருக்கிறேன். யாரும் அவர்களை தொந்தரவு பண்ண மாட்டார்கள். ஆனால் அவர்கள் ஏதோ திருடன் போல் முழியை வைத்து இறுக்கமாக இருப்பார்கள்.

புகழடைந்தால் தம்மால் எங்கும் சாதாரணமாய் போக முடியாது, மக்கள் மொய்க்கிறார்கள் என நடிகர்கள் அடிக்கடி கூறுவார்கள். பிரபலத்தின் விலை என்பார்கள் ஆனால் ரஜினி போல் மிகச் சில நடிகர்களுக்கே அது பொருந்தும். வேறு பல "பிரபலங்கள்" தங்களுக்குள் அப்படி நினைத்துக் கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள்.


உண்மையில் சினிமா நடிகர்கள், கிரிக்கெட் வீரர்கள் பரிதாபமானவர்கள். மீடியா அவர்களை வைத்து ஒரு பெரிய நீர்க்குமிழியை உருவாக்குகிறது. பிறகு பிரபலமும் அவரது ரசிகர்களும் பொதுமக்களுமாய் அதை வைத்து உதைபந்து ஆடுகிறார்கள். உடையும் வரை ஆடுவார்கள்.

பிரச்சினை நம்முள்ளே இருக்கிறது. ஒரேநாளில் நாம் வேறு யாரோ ஆகி விட்டதாய் நினைப்பதில் இருக்கிறது. நம்முடன் நிறைய பேர்கள் இருப்பதாய் நினைப்பதில் இருக்கிறது. நாம் அப்படியே அதே இடத்தில் தான் இருக்கிறோம். மீடியா ஒரு கற்பனையை உருவாக்கும். அதை நம்பினால் அது மெல்ல மெல்ல நம்மை அரித்து கொன்று விடும். பிறகு நாம் நம்மைப் பற்றின வாழ்த்துக்களுக்காக, பேஸ்புக் லைக்குகளுக்காக, தொலை பேசி அழைப்புகளுக்காக, பத்திரிகை பேட்டி, படங்களுக்காக ஏங்க ஆரம்பிப்போம்.

இந்த ஏக்கம் ஒரு விதத்தில் நாம் நம்மை விரும்பவில்லை எனக்காட்டுகிறது. யாருமே வாழ்த்தாத லைச் செய்யாத கொண்டாடாத ஒரு சுயம் நமக்குள் உள்ளது. அதை வெறுக்கிறவர்கள் தான் வெளியே உருவாகும் பிம்பத்தை வழிபடுவார்கள்.

இது கூட்ட நெரிசலில் விழுந்து சிக்கி மிதிபட்டு சாவதற்கு சமம். இது போன்ற பிரபலங்களை நினைத்தால் எனக்கு பரிதாபமாக உள்ளது. அவர்களுக்கு நிச்சயம் உளவியல் சிக்கல்கள் வரும். மிகுந்த அதிர்ஷ்டமிருந்தால் தப்பிக்கலாம். அதற்கு இந்த வெளிச்சம் வெளியே நம் பிம்பத்தின்மீது விழுகிறது நம் மீது அல்ல என புரிய வேண்டும். ஆனால் மீடியா புயல் போல் அடிக்கையில் அந்த நிதானம் ஒருவருக்கு வாய்க்குமா என்பது சந்தேகமே.

## அனல் பறக்கப் போகும் தமிழரசு



# வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

சில தினங்களுக்கு முன்னர் டான் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் சிவகரன் கலந்து கொண்டு கருத்துரைத்தார். அவரது வாய்ச் சவடால் பேச்சு எனக்கு ஈழவேந்தனை நினைவூட்டியது. மக்களின் பொருளாதாரப் பிரச்சினை, மாகாண சபை செயற்படாமை ஆகியன பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை.

எங்களைப் பொறுத்தவரை 40ஆயிரம் போராளிகளையும், 5 இலட்சம் மக்களையும் இழந்ததற்கு மாகாண சபை தீர்வல்ல. நாங்கள் அபிவிருத்தியைப் பற்றி யோசிக்கவில்லை. எலும்புத் துண்டு போன்ற அது இப்போது அவசியமில்லை. எங்கடை நோக்கமெல்லாம் மரபுவழித் தாயகம், சுயநிர்ணயத்தோடை வடக்கு கிழக்கு இணைந்த தாயகந்தான். அதை நோக்கித்தான் நாங்கள் செயற்பட வேண்டும். அதுக்குத்தான் மக்கள் எங்களைத் தெரிவு செய்திருக்கினெ் என்றவாறு திருவாய் மலர்ந்துள்ளார்.

அதுமட்டுமல்ல துரோகக் கும்பல்கள் கைப்பற்றாமல் இருப்பதற்குத்தான் மாகாண சபையைக் கைப்பற்றினம். அதிலை ஒண்டும் இல்லை. அதைச் செயற்படுத்த வேண்டிய எந்தத் தேவையும் எங்களுக்கில்லை என்று வேறு சொல்லியிருக்கிறார்.

ஜெனீவாவில் தன்னைப் பேச சுமந்திரன் அனுமதிக்காதமை பற்றி அனந்தி கூறியதையும், அண்மையில் இந்தியாவில் இருந்து திரும்பி வந்து சம்பந்தனும், சுமந்திரனும் கூறிய விடயங்கள் குறித்தும், தமிழரசுக் கட்சி மாநாட்டில் சம்பந்தனது உரை குறித்தும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஜெயச்சந்திரனும், கருத்துரைத்த யசோதரனும் கூறிய விடயங்களுக்கு சவடால் மறுத்தான்களை அவர் விட்டுக் கொண்டிருந்தார்.

அதில் ஒரு கட்டத்தில் தலைவர்கள் தவறு செய்யலாம். ஆனால் தொண்டர்களும், மக்களும் தெளிவாக இருக்கின்றனர் என ஒரு போடு போட்டார். புலிகளால் மாற்று இயக்கங்களும், பொது மக்களும் கொல்லப்பட்டதை தேசியத்துக்கு எதிரான துரோகம் புரிந்தவர்களே கொல்லப்பட்டனர். அதை நியாயக் கொலை என்று சொல்லலாம் என்று வேறு அறிக்கை விட்டார்.

தமிழரசுக் கட்சியின் அரசியலே வாய்ச் சவடால் அரசியல்தான். அவர்கள் கடந்த 60 வருடங்களாக வாயால்தான் பிழைத்தார்கள். அந்த வழியிலேயே இளஞ்சிங்கங்களும் (மன்னிக்கவும் புலிகளும்) பயணிக்கின்றனர்.

யுத்தம் நடைபெற்று அந்த யுத்தத்தில் இவர்களது வயதையொத்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டு மடிந்த வேளையில் பல்கலைக் கழகப் படிப்பென்றும், சுகபோகமென்றும் வாழ்ந்த காலங்களை தவறியும் நினைத்துப் பார்க்கத் தயாரில்லாத சிவகரன் அந்த நேரத்தில் மனதுக்குள் பூசலார் நாயனார் கோவில் கட்டியதைப் போல மனதுக்குள் போராட்டம் நடத்தினேன் என்று கூறினாலும் ஆச்சரியப்பட முடியாது.

எனது கேள்வியெல்லாம் தமிழரசுக் கட்சி இரு வழிமுறையில் பயணிக்கப் போகிறதா என்பதே. 1. சம்பந்தன், சுமந்திரன் என்று இலங்கை அரசோடும், இந்திய அரசோடும், சர்வதேசத்தோடும் பேசிக் கொண்டும், மிதவாதிகளாக மென்மையான அறிக்கை விடுத்துக் கொண்டும் இருக்கும் கிழத் தமிழரசுக் கட்சி ஒன்றாக இருக்குமா? அது கூட்டமைப்பில் இணைந்துள்ள ஏனைய இயக்கங்களோடு இணக்க அரசியலை நடத்துவதாக இருக்குமா? வழக்கம் போல மக்களுக்கு ஒன்றையும், உலகத்துக்கு ஒன்றையும் சொல்லிக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டோடு தொடர்ந்தும் பயணிக்கப் போகிறதா?

2. மாவை அண்ணரின் போர் முழக்கப் பேச்சுக்களோடு சிவகரன், கஜதீபன் .போன்றோரால் இளைஞர் அணி முறுக்கேற்றப்பட்டு, உசுப்பேற்றப்பட்டு கொஞ்சத் தமிழ் இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் செயற்பாடுகளில் இளந் தமிழரசுக் கட்சி செயற்படப் போகிறதா? சிவகரனின் வாக்குமூலப் படி நோக்கினால் இந்தியா துரோகத்தனம் புரிந்தது, இலங்கை அரசு பேரினவாத அரசு. அது ஒன்றுந்தராது. சர்வதேசத்தை நம்பிப் பயனில்லை. கடந்த காலங்களில் ஒட்டுக்குழுக்களாகச் செயற்பட்ட ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களுக்கு தமிழ் மக்களது பிரச்சினை குறித்து பேச அருகதையில்லை, தலைவர்கள் தடுமாறினாலும் அவர்களை ஓரங்கட்டி விட்டு நாம் இலக்கு நோக்கிப் பயணிப்போம். போராடியே வெல்லலாம் என்ற அவரது கருத்துக்கள் முக்கியமானவை.

எனவே, அடுத்து வரும் நாள்களில் பெரும் போராட்ட களத்தை அவர்கள் திறந்து விடப்போகிறார்கள் என நம்பலாம். ஏற்கனவே டிசம்பர் 31வரை இலங்கை அரசாங்கத்துக்கு காலக்கெடு வேறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எங்களது பெருந் தலைவர்கள் எத்தகைய சவடால் போராட்டம் நடத்தினாலும் அவர்கள் தங்களது குடும்பத்தினரை குறிப்பாக, இளஞ்சிங்கங்களான பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். சம்பந்தன், மாவை, சுரேஸ், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், சரவணபவன் என்று எல்லோரது பிள்ளைகளும் மனைவியரும் தமிழ்நாட்டிலும், கனடாவிலும், சுவிசிலும், இங்கிலாந்திலும், கொழும்பிலுமாக பாதுகாப்பாக உள்ளனர்.

இலங்கை அரச பேரினவாத(?) அமைச்சர்களது உதவியுடன் நல்ல பாட-சாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் தமது பிள்ளைகளுக்கு சீற் எடுத்தும் உள்ளனர். அவர்களுக்கு ஒன்று என்றால் "நிற்க நிழல்" இருக்கிறது.

சிவகரன் போன்றோருக்கு ஒரு ஆலோசனை. நீங்கள் போராட்டத்தில் ஈடுபடாமலே பெரும் போராளியாகக் காட்டிக் கொள்ளக் கூடிய வகையில் உங்களை வளர்த்துள்ளீர்கள். பூவில்லாமல் மாலை கட்டும் கைங்கரியத்தில் நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். ஆனால் நிற்க நிழல் வேண்டும் தம்பி! உங்கள் தலைவர்களைப் பின்பற்றி தமிழ் நாட்டிலோ, கொழும்பிலோ, ஜெனீவாவிலோ பின்தளம் ஒன்றை நிறுவினீர்கள் என்றால் நீங்கள் பெருந்தலைவராக விரைவில் மாறி விடுவீர்கள். அது மட்டுமல்ல தடுமாறும் தலைவர்களை வீழ்த்தி இலட்சியத்தை நோக்கி உங்களைப் பயணிக்க வைக்கும்.


# யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம் சங்கானை




பாடசாலை ஆசிரியர் குழாம்

பாடசாலை வரலாறு

ஈழத்திருநாட்டின் வடபகுதியில் யாழ்.மாவட்டத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும். கற்றோரும், கலைஞர்களும், செல்வப்பெருவணிகர்களும், விவசாயப் பெருமக்களும் நிறைந்து வாழும், சங்கானைப் பட்டினத்தின் மத்தியில் வல்லை வீதியில் ஆறுமுக நாவலரது மரபில் உருவாகிய சைவப் பாடசாலைகளில் ஒன்றாகஇப்பாடசாலை இயங்கிவருகிறது. இப்பாடசாலை சங்கானைக் கிராமத்தில் வாழும் சைவப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஏதுவாக பெரியார் பி.சரவணமுத்து சிவசம்புவினால் 1928ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அன்று அவரது காணியில் சிவப்பிரகாச மகாவித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்கு தனது மூத்தமகனான சிவப்பிரகாசம் என்பவரின் பெயரைக் குறித்தே சிவப்பிரகாச வித்தியாசாலை என அவர் பெயரிட்டார்.



பாடசாலை அதிபர்
திரு சூ.நோபேட் உதயகுமார்

வாழும் ஒரு பாடசாலை





11.07.2014 அன்று காலை 9 மணிக்கு அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் இப் பாடசாலை மாணவர்களிற்கு காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் செல்லையா சற்குணராசாவினால் சாரணர் சின்னங்கள் அணிவிக்கப்பட்டன.



அதிபர் ஆசிரியர்களுடன் 2015 வணிகப்பிரிவு மாணவர்கள்




அதிபர் ஆசிரியர்களுடன்தரம் 10 வணிக மாணவர்கள்





பிரதி அதிபர்
திரு.க.மகேந்திரராஜா

பாடசாலை மாணவ மாணவிகள்



### - சிந்தாத்திரை மாதா உற்சவத்தின் போது -

# வியாபாரங்களில் ஈடுபட விரும்புவோர் பிரதேசசபையிடம் அங்கீகாரம் பெறவேண்டும்

(வேலணை)

வேலணைசாட்டி சிந்தாத்திரைமாதா கோவிலில் வருடாந்த திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளன.

இவ் ஆலயத்தின் உற்சவ காலங்களில் வியாபாரங்களை செய்ய விரும்புவோர் மற்றும் சிற்றுண்டி தேனீர் கடை, வியாபாரம் உட்பட உணவு பண்டங்களை தயாரித்து விற்பனை செய்யவிரும்புவோர் கண்டிப்பாக வேலணை பிரதேச சபையினது அங்கீகாரங்களையும் சுகாதார பகுதியினரது அங்கீகாரங்களையும் பெற்றுக்கவேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வியாபாரத்தை மேற்கொள்ளுகின்ற உரிமையாளர்களும் தொழிலாளர்களும் தங்களினது தேசிய அடையாள அட்டை நிழற்பிரதி ஒன்றினை தங்களுடன் வைத்திருக்க வேண்டும் அத்துடன் ஆலயத்திற்கு வருகின்ற அனைத்து மக்களும் தங்களுடன் எடுத்துவரப் படுகின்ற வாகனங்களான துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைபிக்கிள்கள் மற்றும் எனைய வாகனங்களை வாகனதரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கொண்டு சென்று பாதுகாப்பாக நிறுத்துவதுடன் பாகாப்பாக நிறுத்து வதற்கென கொடுக்கப்படுகின்ற பற்றுச் சீட்டினையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மேலும் உற்சவ காலத்தில் ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒழுங்கு விதிகளையும் சுகாதார நடைமுறைகளையும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமான தொன்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சின்னஞ்சூட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவாலி சென்பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் சின்னஞ்சூட்டும் விழா நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு அதிபர் நந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. சிவானந்தராசா கலந்து கொள்ளவுள்ளார். (66)

# சுற்றுச்சூழலில் டெங்குத்தாக்கம் விழிப்புணர்வூட்டல் கலந்துரையாடல்


வடமாகாண சுகாதார அமைச்சினால் டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு ஒரு வாரத்திற்கான டெங்கு நடவடிக்ன்கதள் தொடர்பான பிரதேச செயலாளர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் பிரகடனப்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட செயலகம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் 'சுற்றுச் சூழலில் இருந்து எம்மை நாம் பாதுகாப்போம்' என்னும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

சுற்றுச்சூழல் மேம்பாடுகள் பற்றியும் பாட்சாலை மட்டத்தில் அறிவுறுத்தும் கருத்தரங்குகளும் பொது இடங்களில் சிரமதானப்பணிகள் தொடர்பான செயற்றிட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. நேற்று முதல் எதிர்வரும் 16 வரையான காலப்பகுதியில் வீடுகள்,ஆலயங்கள்,பொது இடங்களில் டெங்கு பரவாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம்,பிரதேச செயலாளர்,சுகாதார பரிசோதகர்கள்,பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (25,48)

## வெள்ளி நற்சிந்தனை...



# "முருகன் கை வேல்"

திருப்பரங்குன்றத்துக் காடுகளிலே "கற்கிமுகி" என்ற ஒரு பெண்பூதம் வாழ்ந்து வந்தது. அதற்கு குதிரைமுகம் அந்தப் பெண்பூதம் சிவபக்தியில் வழுவும் சிவபக்தர்களை மட்டுமே தனக்கு இரையாக்கிக் கொள்ளும் பூசையில் வழுவும் சிவபக்தன் கிடைத்தவுடன் பூதம் கொன்று உண்டு விடுவதில்லை ஓர் ஆயிரம் பேர் ஒன்றாகச் சேர்ந்த பின் தான் பூதம் உண்ணும் அதுவரை சிவபக்தர்களை குகையில் அடைத்து வைக்கும்.

இந்தப்பூதம் இப்படியாக பக்தர்களை விருந்துக்காக உணவு கொடுத்து வளர்த்து வந்த நிலையில் ஒரு நாள் ஒரு குளத்தின் அருகிலிருந்த மரத்திலிருந்தபடியே தன் பண்ணைக்கு புதிதாக இன்று ஆள்கிடைப்பானா என்று நோட்டம் விட்டுக் கொண்டிருந்த போது ஒரு தாடிச்சாமியார் வந்து சேர்ந்தார். அவர் பூசையைத் துவங்கினார். பூதத்திற்கு ஏகமகிழ்ச்சி ஆனால் சாமியார் பூசையில் இருந்து வழுவதாக இல்லை எப்படியாவது பூசையிலிருந்து வழுவச் செய்யும் நோக்கத்துடன் அம்மரத்திலிருந்தும் ஒரு இலையைப் பறித்து அதை ஏதோ உச்சரித்துக் கீழே போட்டது. இலை குளக்கரையில் ஒருபாதி நீரிலும் மறுபாதி நிலத்திலுமாக விழுந்தது. என்ன விந்தை நீரில் விழுந்த பகுதி மீனாயிற்று மண்ணில் விழுந்த பகுதி பறவையாயிற்று ஒன்று நீரில் உலவும் தன்மையுடையது; மற்றொன்று விண்ணில் பறக்கும் இயல்புடையது ஒன்றை ஒன்று தரைக்கும் நீருக்குமாக இழுக்கப் போராட்டம் வலுத்தது.

இந்த அதிசயம் தாடிச்சாமியாரின் கவனத்தை ஈர்த்தது சிவ பூசையில் ஈடுபட்டிருந்த மனம் இப்போது இந்த சித்து விளையாட்டில் இலயித்தது. இந்த ஒரு காரணம் போதாதா பூதத்திற்கு? வினாடியிலே சாமியாரைப் பற்றி விரைந்து தன் குகையில் சேர்த்தது திடீரென குகைக்கு வந்த சாமியாருக்கு ஒன்றும் புரியவில்லை தம்மைச் சுற்றி நோக்கினார். ஒரே கூட்டம் எல்லோரும் உண்டு கொழுத்தது பெருச்சாளிகள் போலக் காணப்பட்டனர்.

குகைக்குள் இருந்தவர்கள் உரத்த குரலில் சப்தமிட்டபடியிருந்தார்கள் நீங்கள் யார்? எதன் பொருட்டு என்மீது கோபிக்கிறீர்கள்? எனச் சாமியார் கேட்டார். பின் ஒருவர் மட்டும் அவரை நோக்கி உம்மை எங்கோ பார்த்தது போல இருக்கிறது நீர் யார்? என்றார்.

"என் பெயர் நக்கீரன் சங்கப்புலவன் எனது சிவபூசைக்கு இடையூறு நிகழ்ந்தது அதனால் என பூசை தடைப்பட்டது. மறுவினாடி நான் இங்கே இருக்கிறேன்" என்றார். குகைக்குள் இருந்தவர்கள் தம் கதைகளைக் கூறினா ர் 999 பேர் இருக்கிறோம இன்று உம்முடன் 1000பேர் ஆகிவிட்டோம் பூதம் இன்று அனைவரையும் உட்கொள்ளப் போகிறது என்று கூறினார்கள்

"அன்பர்களே! வருந்தாதீர்கள்! நாம் முருகனை வேண்டி நம் துயரத்தை துடைக்க முயற்சி செய்ய வேண்டுமே தவிர புலம்பி நிற்பதில் எந்தப் பயனுமில்லை என்று கூறிவிட்டு உள்ளம் உருக கந்தவேளை எண்ணி, "உலகம் உவப்ப" என்று தொடங்கி திருமுரகாற்றுப்படை பாடினார் வேல் வந்து குகையைப் பிளந்து நக்கீரரையும் மற்றவர்களையும் விடுவித்தது கற்கிமுகி பூதத்தின் இதயத்தைப் பிளந்து சென்றது என்பது கதை

நம்பித்தொழுவோர்க்கு முருகன் கை வேல் என்றும் துணையாகும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒலியன்றி வேறல்ல இசை. ஒரு நாய் குரைப்பதில் இசை இருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் நடையிலும் இசை இருக்கிறது. இசை விவாதிக்கப்படக்கூடிய விஷயமல்ல. அது அனுபவத்துக்குரியது. இந்த உலகம் தனக்கே உரிய லயத்தில் இயங்குகிறது. அது தனது சமநிலையை இழக்காமல் சுழல்கிறது. அதே போல் ஒலியின் அடிப்படை ஆதார சுருதி ஒன்றே. அதில் ஏற்ற இறக்கங்கள் கிடையாது. அது உச்சத்தை நோக்கி உயர்வதுமல்ல, அலைவுகள் கொண்டு சஞ்சரிப்பதுமல்ல. இசை எப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பது. ஆனால் அதன் இயக்கம் நமது சாமானிய புலன்களுக்கு அப்பாற்பட்டது. மனிதர்களாகிய நம் அறிவு குறுகிய எல்லைகளுக்கு உட்பட்டது. செவிப்புலனின் அலைவரிசைக்குத் தக்க ஒலிகளைதான் நம்மால் கேட்க முடியும். ஆனால் அதற்கு மேலும் கீழும் ஸ்வரங்கள் உள்ளன. இந்த விஷயத்தை நாம் மறந்து விடுகிறோம். இயற்கையின் ஆதார சுருதியை மனிதன் தன் வசதிக்காக ஒக்டேவின் ஏழு ஸ்வரங்களாகப் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு நாய் ஊளையிடுவதைக் கேட்டுப் பாருங்கள். அதில் ஸ்வரப் பிரஸ்தானம் இல்லையா? உண்மையில் வெவ்வேறு சமயங்களில் ஒரு நாய் என்னென்ன ராகங்களில் குரைக்கிறது என்பதை இசைக் குறிப்புகளாக எழுத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறேன். இது என் எண்ணத்தை நிரூபிப்பதாக இருக்கிறது – ஒலியன்றி வேறல்ல இசை. – **இளையராஜா**


இந்தியாவில் இந்த நூற்றாண்டின் மாபெரும் இசையமைப்பாளர்கள் என்று தேடினால் நாம் நிறையப் பேரைச் சொல்லலாம். எதிர்காலத்திலும் நிறையப் பேர் வரப்போவது உறுதி. ஆனால் இதுவரை யாருமே கால உணர்வை ஒரு கருப்பொருளாக உறையச் செய்தது கிடையாது. அண்டப் பெருவெடிப்பில் துவங்கி யுகசந்தி வரையிலான காலத்தைக் குறுக்கி இசையில் வார்ப்பது ஒரு கருத்துநிலைச் செயல்பாடாகும். ஆனால் இளையராஜா இதை, தனது Nothing but Wind இசைப்பேழையில் உள்ள ஐந்து இசைக் கோவைகளில் ஒன்றில் சாதித்திருக்கிறார். அதுதான் இசைப்பேழையின் தலைப்பாகவும் அமைந்திருக்கிறது. இந்த இசைக் கோவையில் அவர் மானுடம் பற்றிய சிந்தனைகளை இசையில் வெளிப்படுத்த சில பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். நன்மை – தீமை, இசை – காற்று உறவு, பரிணாம வளர்ச்சி, மனித இனத்தின் வளர்ச்சியும் முடிவும், என்று பல தளங்களில் இயங்குகிறது ராஜாவின் இசை.

பிரபஞ்சத்தின் ஆரம்ப நிமிடம் முதல் எதிர்கால நிகழ்தகவு வரை உள்ள காலஅளவை 11 நிமிடங்களாய் வெளிப்படுத்தும் ஒரு நிஜப்படைப்பு. இந்த உருவமற்ற கற்பனையை மிகத் தத்ரூபமான இசைத்துணுக்குகளாக வடித்தது மட்டுமல்லாது கேட்பவர்களுக்கும் தம் ஐம்புலன்களின் ஒன்றின் வழியாக வேணும் அதை கடத்த இளையராஜாவால் முடிந்திருக்கிறது.

– **விக்கி**

நவீன நாகரிகத்துக்கும் மனித இனத்துக்கும் இடையிலுள்ள போராட்டத்தை இங்கு இளையராஜா மிகுந்த ஆற்றலுடன் வெளிப்படுத்தியிருக்கிறார். பறவைகள் மற்றும் வெட்டுக்கிளிகளின் சீட்டியொலியையும் மூங்கில் காடுகளிடையே காற்று புகுந்து எழுப்பும் சலசலப்பையும் கேட்டுணர்ந்த மனிதன், முதலில் மூங்கிலில் துளையிட்டு குழல் செய்து கொள்கிறான், அதில் இசை எழுப்புகிறான். ஆனால் அந்த கோகுல காலம் விரைவிலேயே அவனைக் கடந்து செல்கிறது, மனித வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்ததாக ஆகிறது, நாளுக்கு நாள் அது தொழில்மயப்படுத்தப்படுகிறது. முதலில ரயில், பின்னர் விமானம், அதன் பின் ஜெட் வேகத்தில் காலம விரைகிறது. இன்று நாம் நட்சத்திரங்களை நோக்கி வெடித்துக் கிளம்பும் ராக்கெட் என்ஜின்களின் உறுமலைக் கேட்கிறோம். ஒரு புறம் இந்த அழுத்தங்களிலிருந்து விடுபட மந்திரங்கள் கோஷங்கள் மூலம் தெய்வீகத்தைத் தொட முயற்சிக்கிறோம். மறுபுறம், டிஸ்கோ இசை, மற்றும் வேறுசில சாதாரண இன்பங்களைக் கொண்டு நாம் கேளிக்கையில் நம்மை மறக்கிறோம். நம் சமூகம் தன்னை அழித்துக் கொள்ளப் போகிறது; தவிர்க்க முடியாத யுகசந்திக்குப்பின் இசைக்கலைஞன் தன் குழலைக் கீழே வைக்கிறான். அவனால் இனியும் வாசிக்க முடியாது. தான் என்ன செய்தாலும் சரி, இசையென்பது எப்போதும், காற்றன்றி வேறில்லை என்பதை அவன் உணர்ந்து விட்டான். – **விக்டர் ஏஞ்சல் ரோபெரோ**

# யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களில் நீர் விநியோகத்திட்டம் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது நெடுந்தீவில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி சேதமடைந்த விடயம் தொடர்பில் அமைச்சர் துறை சார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், யாழ் - கிளிநொச்சி இரணைமடுக் குடிநீர் விநியோகத திட்டத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும், ஆறுமுகன திட்டம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத்திட்டம் குறித்து துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார்.


இதேவேளை நடப்பாண்டில் குறித்த சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்தும் இதில் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வகையிலும், சுத்தம் சுகாதாரத்தை பேணும் வகையிலும் மக்கள் முழுமையான பயன்களை பெற்றுக் கொள்ளும் வகையில் குடிநீர் விநியோ கத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இதனிடையே அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் குடிநீர் விநியோகததிட்டம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக வும் ஆராயப்பட்டது.

இதன்போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திட்டப் பணிப்பாளர் பாரதிதாசன், யாழ்.பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸ்வரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

## பரமர் சங்கமம்



'அரசன் ஆண்டி ஆவதும் ஆண்டி அரசன் ஆவதும் ஆழிசூழ் உலகில் அருமையாகாவா நடந்து கொண்டிருக்கு! இதை யேன் சொல்ல வாறனெண்டால் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபலரத்தினம் (கோபு) முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருப்பதான செய்தியைப் பாத்ததும் பரமரின் சிந்தனைக்கு அப்புடித்தான் பட்டிச்சு

கோபாலரத்தினம் பத்திரிகைத்துறையில் பழமும் திண்டு கொட்டையும் போட்டபெரிய ஐாம்பவான் அவர் பெரிய பட்டதாரியோ பணக்காரனோ அல்லன். வீரகேசரியில் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்த அவரது வாழ்வில் மேடு பள்ளங்கள் அதிகம்.

அவரது காதல் திருமணவாழ்க்கையே கத்திமுனையில் நடப்பதாகவே அமைந்ததாக அவர் எழுதிக்கொண்டிருக்கும் அந்தநாள் ஞாபகம் தொடரில் குறிப்பிட்டதில் வாசித்து அறிய முடிஞ்சுது. ஊதியஉயர்வு கோரி நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இவரும் இன்னும் சிலரும் வேலையை இழந்தனர்.

அப்படியான காலங்களில் அவரது காதல் வாழ்க்கைத் துணைவி சிற்றுண்டி தயாரித்து கடைகளுக்கு வழங்கிச்சீவியம் நடத்தியதை நானறிவன் வண்ணை வெங்கடேசவரதராஜப் பெருமாள் ஆலயத்தேர்முட்டி மருங்கில் ஆலய வீதியால் நாவலர் வீதிக்கு வரும் முகதாஒழுங்கை கிழக்குப் பக்கமாக அமைந்த முதல் வீடு; அப்பவாழ்ந்த வீடு.

'ஈழமுரசு' நாளிதழின் பிரதம ஆசிரியராக இருக்கையில் செய்தியாளரான நான் இடைக்கிடை அங்கு போய் வந்தேன். இதற்கு முன்பாக வீரகேசரியால் புறக்கணிக்கப்பட்டவர்களால் 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியபீடம் அலங்கரிக்கப்பட்டது. அதில் கோபு முக்கியமான காயாக விளங்கினார்.


இண்டைக்குக் குடாநாட்டில் இருந்து நான்கு தினசரிகள் வெளிவருகின்றன. என்றால் ஈழகேசரியோ சதந்திரனோ அல்ல பதினைந்து வருடங்கள் பொருளாதார எதிர்காற்றில் சுழன்றடிச்சு நின்று பிடித்த ஈழநாடு இட்ட பலமான அத்திபாரம் எண்டால் வெறும் கூற்றல்ல எல்லோரும் பிரிந்து சென்ற போதும் 'ஈழநாடு' பத்திரிகையின் இறுதி மூச்சுவரை ஒக்ஸிசனாக விளங்கியவர் கோபு

'ஊர்சுற்றி: எஸ்.எம்.ஜி, கோபு என்னும் புனைபெயர்களில் அரசியல், புதினக்கட்டுரைகளை எழுதிய கோபாலரத்தினம் ஸ்ரீரங்கன் என்றொரு புனைப்பெயரில் சிறுகதைகளை எழுதி இருப்பதும் பலரறியாத விடயம் கட்டுரைகளோ செய்தி விமர்சனங்களோ எழுதும் பொழுது எந்தக்குறிப்புக்களையும் வைத்துக் கொள்ளாமல் சகல தரவுகளையும் ஞாபக சக்தியூடாக எழுதும் ஆற்றலும் கோபுவுக்கு கைவந்த கலை

இப்பொழுது சுழிபுரம் 'சிவபூமி' முதியோர் இல்லத்தில் தன்னுடைய பொறுப்பில் இணைத்துவிட்ட வண்ணைக் கலைவாணர் நாடக மன்ற ஸ்தாகபகர் கலாபூஷணம்' இராசையா பீதாம்பரம் (இரா.பற்குணம்) என்பாரே 2013ஆம் ஆண்டு நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் பெரும் பணச் செலவில் இவருக்கு பாராட்டு விழா நடாத்தி பொற்கிளி பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தும் இருந்தார்.

'அரசன் ஆண்டியாவதும் ஆண்டி அரசனாவதும்' போலவே ஒரு பத்திரிகையாளனும் முதுமைக்காலத்தில் முதியோர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்பட கொடுத்து வைச்சிருக்க வேணும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்....

# சொந்தக்கால்களில் நின்று முன்னேற்றம் காண வேண்டும்



(பண்டத்தரிப்பு)

எமது மக்கள் கையேந்தும் சமூகமாக இல்லாது சொந்தக் கால்களில் நின்று முன்னேற்றம் காணும் வகையில் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு பிரான்பற்று உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேற்றுமுன்தினம் எள்ளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எள்சார்ந்த உற்பத்தி மட்டுமல்லாது மக்களின் வாழ்வாதாரத்திற்கான ஏனைய உதவித் திட்டங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எள்சார்ந்த உற்பத்திகள் கலப்படமற்ற வகையில் சுத்தமானதாகவும் சுகாதாரமான முறையிலும் செய்யப்பட வேண்டுமென்பதுடன் மக்களுக்கு பாதுகாப்பான வகையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரான்பற்று கிராமத்தை எதிர்காலத்தில் சிறந்த நல்லெண்ணெய் உற்பத்திக் கிராமமாக மாற்றிய மைப்பதற்கு எல்லோரும் ஒன்றி ணைந்து உழைக்க வேண்டும்.

கடந்த கால தவறான அரசியல் தலைமைகளினால் எமது சமூகம் கையேந்தும் சமூகமாக வாழ வேண்டிய துர்ப்பாக்கியம் எதிர்கொள்ளப்பட்டிருந்த நிலையில் எதிர்காலத்தில் கையேந்தும் சமூகமாக இல்லாது சொந்தக் கால்களில் நின்று முன்னேற்றம் காணும் வகையில் திடசங்கற்பம் பூண வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் உதவுக்கரங்கள் கடன் திட்டம் தொடர்பான விளக்கவுரையினை யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சிதிட்ட இணைப்பாளர் ரகுநாதனும், உரையினை ஈ.பி.டி.பியின் சர்வதேச. முக்கியஸ்தர் விந்தனும் நிகழ்த் தினர். தொடர்ந்து எள்சார்ந்த உற்பத்தியாளர் சங்கத்திற்கான எள்ளையும் சங்கத்தலைவர் ரவிச்சந்திரனிடம் அமைச்சர் கையளித்தார்.

இதன்போது சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் முரளிதரன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவ கெங்காதரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா ஆகியோர் உடனிருந்தனர்.

# திருடர்களை மடக்கிப்பிடித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

வவுனியா, சந்தை உள்வட்ட வீதியில் உள்ள நவீன சந்தை கட்டடத் தொகுதியில் இயங்கிய இரு கடைகளை உடைத்து திருடியவர்களை தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் நவீன சந்தைத் தொகுதியில் உள்ள அழகுப்பொருள், புடவைக் கடைகள் உடைத்து உட்புகுந்த திருடர்கள் அவ்விரு கடைகளிலும் இருந்த 6000 ரூபா மற்றும் 10,000 ரூபா பணத்தை திருடியுள்ளனர்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் திருடர்களின நடமாட்டத்தை அவதானித்து, ஒருவரை மடக்கிப் பிடித்தனர். மேலும் இருவர் அங்கிருந்து தப்பியோடி கண்டி பஸ்ஸில் ஏறி மாயமாகியுள்ளனர். சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதும் பஸ்ஸை வழி மறித்த வவுனியா பொலிஸார் குறித்த இரு நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் ஹற்றன் மற்றும் எட்டியாந்தோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவார். அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்

### – இவ்வாண்டின் கடந்த 8 மாதத்தில் –

# மதுபானசாலை அனுமதி மூலம் 46075 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டின் கடந்த 8மாதத்தில் மதுபானசாலை அனுமதிமூலம் 46075மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள் ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2008ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை மதுபானவரி மூலம் 2 இலட்சத்து 53ஆயிரத்து 960மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

இவ்வாண்டின் கடந்த 8 மாதகாலப்பகுதியில் 42. புதிய மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து நெரிசலை தடுக்க மொனோரயில் சேவைதிட்டம்

(கொழும்பு)

கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த மொனோரயில் சேவையை ஆரம்பிக்க எண்ணியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் தனித்துவமான போக்குவரத்து சேவையான மொனோரயில் திட்டத்தை கொழும்பிலும் நடைமுறைப்படுத்த விருப்பம் கொண்டுள்ளதாக ஹிட்டாச்சி மொனோரயில் பிரிவு அறிவித்துள்ளது.


இலங்கைக்கு வருகைத்தந்த ஜப்பானிய பிரதமருடனான வர்த்தகக்குழு இதனை அறிவித்துள்ளது.

மொனோர்யில் திட்டம், போக்குவரத்துக்கு மிகவும் காத்திரமான பங்கை அளிக்கும் என்று ஹிட்டாச்சி மொனோ ரயில பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரத்தை மையப்படுத்தும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 1.3 பில்லியன டொலர்கள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது .இதற்கான ஆய்வு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன.


* A இல் உள்ள அனைத்து பொருளுமுள்ள கூட்டத்தின் கீழ் கோடிடுக.

14.




(A) (i) (ii) (iii)

15.




(A) (i) (ii) (iii)

16.




(A) (i) (ii) (iii)

17.



(A) (i) (ii) (iii)

18.



(A) (i) (ii) (iii)

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் சனிக்கிழமை வெளிவரும்




தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015 | பகுதி - I | 1.30 மணி

# கல்வி முரசு




01) ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் அமைப்பு யாது?



(i) (ii) (iii)


02)



(i) (ii) (iii)


ஆரம்பத்திலுள்ள படத்திற்கு பொருத்தமான படம் எது.

03)



(i) (ii) (iii)

04)



(i) (ii) (iii)

ஒழுங்கு படுத்தினால் வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

05. A B C D E




(i) BDECA (ii) BADEC (iii) BDCAE

06. A B C D E



(i) ECABD (ii) ECDAB (iii) EABCD


07. A B C D E



(i) CEDAB (ii) CEADB (iii) CDEAB


* பிழையான படத்தின் கீழ் கோடிடுக.

08. A B C D






09)



A B C D

10)




11)



(i) (ii) (iii)


12)



(i) (ii) (iii)

சரியாக பிரிக்கப்பட்ட அமைப்புக் கூட்டத்தின் கீழ் கோடிடுக.


13)




(i) AC (ii) BC (iii) BD

# பிரதேசத்தின் அபிவிருத்தி, முன்னேற்றம் தேர்தலின் போதே நிர்ணயிக்கப்படுகிறது

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு சமூகத்தினதும் அபிவிருத்திகளும் வரலாற்றுப் பதிவுகளும் அந்தப் பகுதிகளின் அரசியல் பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்யும் தேர்தல் காலங்களில் தான் நிர்ணயிக்கப்படுகின்றது.

இந்தக் காலத்தில் மக்கள் செய்யும் தவறுகளால் தான் தமிழ் மக்கள் தடுமாற்றங்களுக்குள்ளாகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான தேவிகுகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

மிருசுவில், கரம்பகம் பகுதி மக்களது அடிப்படைத் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்களுடனான கலந்யாடல் சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்களிடையே ஒற்றுமை ஏற்படுமானால் அனைத்து வளங்களையும் அதிகாரத்துடன் கேட்டுப்பெற்றுக் கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

அரச அதிகாரிகள் பேதங்களை மறந்து மக்களது தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பவர்களாக மாற்றம் கண்டால் தான் ஒவ்வொரு சமூகத்தையும் திறம்பட உருவாக்க முடியும்.

மக்களது பொருளாதார செயற்பாடுகளும் அபிவிருத்தி செயற்பாடுகளும் யதார்த்தமானதாக அமையவேண்டுமானால் ஒருமித்த கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இதனைத்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியல் என்னும் நீரோட்டம் மூலம் சிறப்பானதாக செய்து வருகின்றார். மக்களது தேவைகளை கூடுமான அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமானால் அரசியலில் ரீதியில் அமைச்சர் பலமான நிலையை அடைய வேண்டும்.

தொடர்ந்தும் அவர்களது அபிவிருத்தியை மட்டும் முன்னெடுத்துச் செல்லாது அரசியல் தீர்வையும் முன்னிறுத்தி நிரந்தரமான உரிமைகளுடன் கூடிய தீர்வை பெற்றுக்கொண்டு தமிழ் மக்களை வாழவைக்க வேண்டும் என்றுதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி போராடி வருகின்றது என்றார்.

இச் சந்திப்பில் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் யாழினி, கிராம சேவையாளர் ஞானசேந்தன் ஆகியோருடன் சமுர்த்தி உத்தியோகத்தர் செந்தூரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# இலவச கண் பரிசோதனை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளதாகவும் இதில் 150 பேருக்கு மட்டுமே இந்த உதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் பொது நிறுவனமொன்றின் அனுசரணையுடன் வலி. தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள மருத்துவ முகாமில் கண் சத்திர சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இவர்களுக்கு இலவசமாக கண் வில்லைகள் வழங்கப்படும் எனவும் வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

# உயர்கல்விச் செயலமர்வு

யாழ்.அமெரிக்கன் கோனரின் ஏற்பாட்டில் அமெரிக்காவில் உயர்கல்வி வாய்ப்பு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு இல, 23 அத்தியடிவீதி, நல்லூரிலுள்ள அமெரிக்கன் கோனரில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் அமெரிக்காவின் உயர்கல்வி ஆலோசகர் எட்னா செல்வநாயகம், அமெரிக்கா தூதகரத்தின் பிரதித்தூதுவர் சீலா கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு கல்வி தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளனர்.

இதில் க.பொ.த சா/த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இதில் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆன்மீக அறவழியை ஊக்கிவிக்கும் பொருட்டு 25 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிகண்டி உப்புக் கிணற்றடி சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு கடந்த சப்பறத் திருவிழாவான கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வசந்த மண்டபத்துக்கு முன்பதாக இடம்பெற்றுள்ளது

அன்றைய திருவிழா உபயகாரரான அருமைத்துரை குடும்பத்தினரால் பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலையில் கல்வி கற்கும் 25 மாணவர்களுக்கென வழங்கப்பட்ட இப்பரிசில்களை ஆலய பரிபாலன சபைத்தலைவர் கி.அருள்நாதர் அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி.ந. தமிழினி திருமதி. சிவநடராஜா ஆசிரியை திருவிழா உபயகாரரும் பரிசில் வழங்குனருமான அருமைத்துரை அரியகிருஸ்ணன் அறநெறிப்பாடசாலை அதிபர்.திருமதி.சண்முகலிங்கம் ஆகியோரினால் மாணவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளனர். (116)

# திருவுடையாள் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த வெளியீடான திருவுடையாள் 5 (பிரதேசமலர்) மலர் இவ்வாண்டு வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மலர் ஒக்ரோபர் மாதத்தில் வெளியிடப்படவுள்ளதாகவும் மலரில் பிரதேசப் படைப்பாளிகளின் ஆக்கங்களையும் சேர்த்து கொள்ளப்படவுள்ளதால் படைப்பாளிகள் 5 பக்கங்களுக்கு குறையாத சிறுகதை, குறுநாடகப்பிரதி மற்றும் ஒரு பக்க கதை என்பவற்றை சமர்பிக்க முடியும்.

படைப்புாளிகள் ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு அலுவலக நேரத்தில் வருகைதந்தோ அல்லது 0212263258 என்ற தொலைபேசி இலக்கத்தில் கலாசார உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு ஆக்கங்களை வழங்க முடியும் அத்துடன் மேலதிக விபரங்களை பெறமுடியும் என கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.(18)

# இந்தியப் பிரஜை கைது

(யாழ்ப்பாணம்)

வீசா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்திய பிரஜை ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கள மருதூர் தமிழ்நாட்டைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஹோட்டலில் சமையல் பணிக்காக வீசா அனுமதியுடன் வந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

ஹோட்டல் முகாமையாளரினால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று இந நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யத் தயாராகவுள்ளார். (இ)


# ஊனமுற்றோருக்கான அரச கலைஇலக்கிய போட்டி

கலாசார அலுவல்கள் திணைகளம் சமூகசேவைகள் திணைக்களம், ஆகியவற்றுடன் பிரதேச செயலகங்கள் இணைந்து நடாத்தும் ஊனமுற்றோர் தொடர்பான அரசகலை இலக்கியபோட்டியை நடாத்தவுள்ளது.

இதன்படி கரவெட்டி பிரதேச செயலகத்தினாலும் இப்போட்டி நடத்தப்படவுள்ளதுடன் இதில் அனைத்து வயதினரும் பங்குபற்ற முடிவதுடன் பிறப்பில் ஊனமுற்றோர் அல்லது யுத்தம், நோய், விபத்தினால் ஊனமுற்றோர் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியும்.

மேலும் போட்டிகளாக நடனம், இசைக்கருவி இசைத்தல், பாட்டுப்போட்டி, பறைசாற்றும் போட்டி, சித்திரப்போட்டி, நாடக ஆக்கம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கரவெட்டி பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (18)




இளவாலை சென்ஸ் ஆன்ஸ் தேவாலய உற்சவத்தின் இறுதி நாள் உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது...

(48)

# ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது முதற்கட்டமாக வான்வழித் தாக்குதல்

## ஒபாமா உத்தரவு



ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சிப் படைக்கு எதிராக, சிரியாவில் வான் வழித் தாக்குதல் நடத்த அமெரிக்க அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற செனட்களின் ஆதரவு இல்லாமல், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக சிரியாவில் தாக்குதல் நடத்த அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். இந்த அறிவிப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாககுதலில் அதிபர் ஒபாமா பிறப்பித்த முதல் உத்தரவாகும்.

அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதல் நினைவு தினத்தில், அந்நாட்டு மக்களுக்காக வெள்ளை மாளிகையிலிருந்து ஒபாமா நிகழ்த்திய உரையில் இது குறித்த சில அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

அதில், "நமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கிளர்ச்சியாளர்கள், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை நாம் வீழ்த்துவோம்.

ஐ.எஸ் கிளர்ச்சி அமைப்பின் ஆயுத குழுவுக்கு நிதி உதவி கிடைப்பதை நாம் முதலில் தடுக்க வேண்டும். இவர்களை இந்த நிலையிலேயே தடுக்காவிட்டால், உலகம் முழுவதிலும் ஊடுருவி தாக்குதல் நடத்துவார்கள். இதற்கான நடவடிக்கை சிரியாவில் தொடங்கப்படவுள்ளது என்றார்.

# அணுக்கழிவை உண்ணும் பக்ரீரியா கண்டுபிடிப்ப



அணுக் கழிவுகளை உண்ணக்கூடிய பக்ரீரியாவை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூமிக்கு அடியில் வசிக்கும் இந்த நுண்ணுயிரிகள் ஒற்றை உயிரணுவைக் கொண்டவை.

இந்த கண்டுபிடிப்பின் மூலம், அணு உலைகளிலிருந்து வெளியாகும் பேராபத்தை விளைவிக்கக் கூடிய கழிவுகளை கணிசமான அளவு அழிக்க முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கழிவுகளை உண்ணும் புக்ரீரியாக்கள் ஏற்றதெனவே கண்டறியப்பட்டிருந்தாலும், அணுக் கழிவுகளைக் கையாளும் பகுதிகளின் சூழலை இந்த பக்ரீரியாவால் மட்டுமே தாங்க முடியும் என்பதை தற்போது கண்டறிந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# சிரியாவில் தாக்குதல் 28 தீவிரவாதிகள் பலி



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இரகசிய ஆலோசனை கூட்டம் நடாத்திய தீவிரவாதிகள் மீது பாதுகாப்பு படைகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் 28 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்தை பதவி விலக வலியுறுத்தி பல்வேறு போராளிக் குழுக்கள் ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. தீவிரவாதிகளின் இரகசிய கூட்டம் நடைபெற்ற கட்டடத்தின்மீது வெடி குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில், அஹர் அல்ஷாம் குழுவின் தலைவர் ஹஸன் அபுட் உட்பட 28 பேர் பலியாகினர். பலர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், இராணுவம் இந்த தாக்குதலுக்கு வெளிப்படையாக பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. இருந்த போதிலும் அதிபர் பஷார் அல் ஆசாத்தின் ஆதரவுப் படைகள்தான் இந்தத் தாக்குதலை நடத்தி யிருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.


UNIVERSITY OF JAFFNA
INVITATION FOR BIDS (IFB)
STILL PHOTOGRAPHY AND VIDEO FOR GENERAL CONVOCATION- 2014

1. The Chairperson, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography and Video to cover the Annual General Convocation- 2014 of the University of Jaffna which is scheduled to be held on 6th & 7th of October, 2014.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
   Contact number: 021 2226500
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Registrar/ Academic Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna until 22nd September, 2014 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees one thousand (Rs.1,000/-).
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the Tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on 23rd September, 2014. Bids will be opened soon after closing at 14.00 hrs on 23rd September, 2014 at the Board room of the Vice Chancellor in the presence of the bidder or bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of 45 Days from the date fixed for receiving of Bids or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;

- In the form included in the Bidding document.
- In favour of "Vice Chancellor, University of Jaffna."
- For a amount of Rs. 10,000/=
- Issued by one of the agencies acceptable to the client.

Vice Chancellor,
University of Jaffna
thirunelvely, Jaffna
10.09.2014

(C/3511)


# ஜம்மு காஷ்மீரில் வெள்ளம் சீரடையும் இயல்பு நிலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில், வெள்ளப் பெருக்கில் கடுமையாக பாதிக்கப்பட்ட ஸ்ரீநகரில், வெள்ளம் வடியத் தொடங்கியுள்ளது. மாநிலத்தின் மற்ற பகுதிகளில் நிலைமை இன்னமும் சீரடையவில்லை. நான்கு இலட்சம் பேர், உதவியை எதிர பார்த்து காத்துள்ளனர். "வெள்ளத் தில் சிக்கியுள்ள அனைவரும் மீட்கப் படுவர். மக்கள், பீதியடையத்தேவையில்லை" என, மத்திய அரசு உறுதி அளித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில், கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவு, கன மழை தற்போது பெய்து வருகிறது. மா நிலத்தில் உள்ள அனைத்து ஆறுகளிலும், வெள்ளம் கரை புரண்டோடுகிறது. இதனால், மாநிலத்தின், 90 சதவீத பகுதிகள், தண்ணீரில் மூழ்கியுள்ளன. இது வரை, 200இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர் பலரைக்காணவில்லை. மீட்பு பணிகளில், இராணுவம், தேசிய பேரிடர் மீட்பு குழு, துணை இராணுவப் படையினர், பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

80இற்கும் மேற்பட்ட விமானங்கள், ஹெலிகொப்டர்களில் மீட்புப் பணி, முழு வீச்சில் நடக்கிறது. படகுகளிலும், மீட்பு பணிகள் நடக்கின்றன.இந்நிலையில், வெள்ளக் காடாக காட்சி அளிக்கும் ஸ்ரீநகரில், நேற்றுமுன்தினம் வெள்ளம் வடியத்தொடங்கியுள்ளது. மூன்றில் இருந்து, நான்கு அடிவரை தண்ணீர் வடிந்துள்ளது. இதனால், அங்கு இயல்பு நிலை திரும்பிவருகிறது. ஆனாலும், வெள்ளத்தில் சிக்கிய அனைவரையும் மீட்டுவிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.என அரசு உறுதியளித்துள்ளது.






# பிரித்தானியர்களில் பலருக்கு ஆங்கில அறிவு குறைவு

இங்கிலாந்தை சேர்ந்த பெரும்பாலனோருக்கு ஆங்கில அறிவு குறைவாக இருப்பதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் பட்டம் பெற்று கல்லூரிகளை விட்டு வெளியேறும் மாணாக்கர்களில் முக்கால் வாசிப் பேர் ஆங்கிலத்திலும், கணக்கிலும் மோசமான நிலையில் உள்ளனர்.

பட்டதாரிகளில் 25 சதவீதம் பேர் மட்டுமே ஆங்கிலத்தின் இலக்கணம் மற்றும் இலக்கியத்தில் சிறந்து விளங்குகின்றனர். மற்ற 75 சதவீதம் பேர் பின் தங்கியுள்ளனர்.

இந்த பிரச்சினையை தீர்க்க இங்கிலாந்து அரசும், பல்கலைக்கழகங்களும் தீவிர முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இறுதியில் முடிவு (Result) நன்றாக இல்லை என கூறப்படுகிறது.




ஆனால் இதற்கு மாணவர்கள் பொறுப்பாக முடியாது என்றும் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு நன்கு பயிற்சிஅளிக்காமல் அவர்களை வெளியேற்றுவதே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# நெடுந்தீவுக்கான போக்குவரத்து சிரமங்களை அகற்ற நடவடிக்கை



நெடுந்தீவுப்பிரதேச மக்களின் கடல் போக்குவரத்தில் உள்ள நெருக்கடிகள் மற்றும் இன்னல்களை அகற்றுவதற்காக நெடுந்தீவுப்பிரதேச துறைமுகம் சுமார் 300 இலட்சம் ரூபாய் செலவில் கடல் ஆழமாக்கப்பட்டு துறைமுகம் விஸ்தரிக்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது இதனடிப்படையில் இக்கடல் ஆழமாக்கும் வேலைத்திட்டமானது நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையிலான குழுவினரால் ஆராயப்பட்டது. உலகவங்கி பிரதிநிதிகள் மற்றும் அவுஸ்ரேலியா நாட்டுப்பிரதிநிதி முதன்மைச்செயலாளர் மற்றும் பிரதிநிதி, உட்பட உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்சில், வீதி அபிவிருத்தி அதி காரசபை பொறியியலாளர் சுதா கரன், பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். மேற்படி கடல் ஆழமாக்கும் வேலைத்திட்ட முன்னெடுப்பினைத்தொடர்ந்து நெடுந்தீவுப் பிரதேசத்தின் ஏனைய அபிவிருத்தி திட்டங்களினையும் அவர்கள் பார்வையிட்டனர்.

# உலக தபால்தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் போட்டி

உலக தபால் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் சித்திர மற்றும் ஆக்கப் போட்டி நடத்துவதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தபால் சேவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நடத்தப்படவுள்ள இப்போட்டி நிகழ்ச்சியானது 3 குழுக்களாக நடத்தப்படவுள்ளது.

தரம் 6 -8, தரம் 9 -11 மற்றும் தரம் 6- 13 ஆகிய தர மாணவர்கள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள முடியும்.

கடிதம் எழுதுதல் போட்டி சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படவுள்ளது.

சித்திரப்போட்டிக்கான ஆக்கங்கள் 18 மற்றும் 14 அங்குல அளவுடைய தாளில் வரையப்பட வேண்டுமெனவும் படைப்புக்கள் யாவும் அருகாமையிலுள்ள தபால் நிலையத்தில் செப்ரெம்பர் 19ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வடமாகாண...

திறைசேரியின் செயலாளர் ஜயசுந்தர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வேளை வடமாகாணத்தின் அபிவிருத்திக்கென 6900 மில்லியன் ரூபாவைத்தாம் கோரியதாகவும் எனினும் 6000 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த ஆளுநர், வடமாகாண சபை அலுவலகத்திற்கு திறைசேரி செயலாளர் விஜயம் செய்து பார்வையிட்ட சமயம் வடமாகாண சபை அதிகாரிகளினால் வடமாகாண சபை கட்டடத்தின் மேல் மாடி வேலைகளுக்கு நிதிஒதுக்கித்தருமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர். இதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கித்தருவதாக திறைசேரிச் செயலாளர் உறுதியளித்ததாகவும் தெரிவித்த ஆளுநர் இந்த நிதிதற்சமயம் பிரதம செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும், இதனைக்கொண்டு அந்தக்கட்டடத்தின் 2ஆம் 3ஆம் மாடிகள் நிர்மாணிக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக்கட்டடத்தின் மேல் பகுதியில் வடமாகாண அமைச்சர்கள், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர்களுக்கான பிரிவுகள் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சி...

அறையில் தன்னைப் பூட்டி வைத்து பலர் தாக்கினர் என்றும் ஒருவாறாத அவர்களின் பிடியிலிருந்து இரவு ஒரு மணியளவில் தப்பி வந்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு தான் சென்றார் என்றும், எனினும் அவர்கள் தனது முறைப்பாட்டை ஏற்கவில்லை என்றும் சுரேந்திர ராஜா தெரிவித்தள்ளார். இதனால் மறுநாள் திங்கட்கிழமை தான் அரசியல் கட்சி ஒன்றின் உதவியுடன் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்தார் என்றும், அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின் அவர்களை விடுவித்துவிட்டனர் என்றும் சுரேந்திரராஜா குற்றம் சாட்டுகிறார். இந்தச் சம்பவம் தொடர்பிலும், தான் குறித்த கடையில் கொள்வனவு செய்த பொருள்களின் தொகைக்கு மேலதிகமாகக் கணக்கிடப்பட்டு பெருந்தொகை பணத்தை தன்னிடம் மிரட்டி பறிக்க அவர்கள் முயற்சிப்பது குறித்தும் ஜனாதிபதி உள்ளிட்டவர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் சுரேந்திரராஜா தெரிவித்துள்ளார்

## இலங்கை...

டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கையிடம் கோரப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஆங்கில செய்தி அறிக்கையில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக செய்திகள் வெளியிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு பிழையான தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அரச ஊடகச் செய்திகளில் குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கையிடம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை என பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

## சர்வகட்சி...

பட்டுள்ளார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்க நேரிடும் என லங்கா சமசமாஜக் கட்சி எச்சரிக்கை விடுத்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிபுணர்கள் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்தி இந்தக் குற்றச்சாட்டுக்களை முறியடிக்குமாறு நாம் கோரியிருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டிருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே இறுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க ஜனாதிபதி, வெளிநாட்டு நிபுணர்களை நியமித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இந்து...

தாக்கங்களை ஆராய்ந்து அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

இன்னும் பல வருடங்களின் பின்னர், இலங்கை உட்பட இந்து சமுத்திர நாடுகளை மற்றுமொரு பாரிய சுனாமி தாக்க வாய்ப்புள்ளதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

## முதலமைச்சர்....

அவசரகாலதேவை நிதியம். இவ்விரண்டு நிதியத்தைத்தவிர நியதிச்சட்டத்தின் கீழ்வைத்துக்கொள்ளமுடியாது வடமாகாணசபை தொடங்கி ஆறு மாதங்களில் மூன்று நியதிச் சட்டங்களை அனுப்பிவைத்திருந்தது. இதில் ஒன்று மாகாணசபை வரி அறவிடுதல் சம்மந்தமானது மற்றையது முத்திரைக்கட்டணம் அறவிடுவது சம்பந்தமானது மூன்றாவது முதலமைச்சர் நிதியம் சம்பந்தமானது இந்த மூன்று நியதிச் சட்டங்களையும் சட்ட வல்லுனர்களைக்கொண்டு பரிசீலித்தோம்.

நியதிச்சட்டம் குறித்து ஆளுநருக்கு இருக்கின்ற அதிகாரத்திற்கு அமைவாக அதில் இருக்கின்ற சட்டத்திற்கு முரணான விடயங்கள் சிலவற்றை நீக்கி மாற்றித்தரும் படி வட மாகாண சபைக்கு திருப்பி அனுப்பிவைத்தேன். ஆனால் நேற்று முன்தினம் நடந்த மாகாணசபை அமர்வில் இரண்டு சொற்களை மட்டும் மாற்றிவிட்டு அதே நியதிச்சட்டத்தை மீளவும் மாகாணசபையினால் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். அதன் பின்னர் மீளவும் சட்ட வல்லுனரை அழைத்து கலந்துரையாடி அவர்கள் சேர்த்திருக்கும் சொற்களில் சட்ட சிக்கல் இல்லை என்றால் முத்திரைச் சட்ட நியதிச்சட்டத்தை அனுமதிக்கவும் முடியும் முதலமைச்சர் நிதியம் சம்பந்தமாக அரசியல் சட்டத்திற்கு முரணாக அனுமதிவழங்க முடியாது இதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பேன் அவர் இதனை. மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பார் என்று நம்புவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் ஆரம்பத்தில் வடமாகாணசபையினால் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தரவுகளுடனான சமர்ப்பணமொன்றை வழங்கினார். தொடர்ந்து யாழ் மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன் சமுர்த்தித்திட்டம், வாழ்வெழுச்சித்திட்டம் சம்பந்தமாக விளக்கவுரை .ஒன்றை வழங்கினார். தொடர்ந்து இலங்கை வேலைவாய்ப்புப்பணியகத்தின் யாழ். கிளையின் அலுவலர் தம்பித்துரை கோடீஸ்வரன் சமுர்த்தித்திட்டத்திற்கும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்திற்கும் இடையிலான வேலைத் திட்டம் குறித்து தெளிவுபடுத்தினார். (பா)

## 13 ஆவது...


புலிகள் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் மர்மமான மரணத்துக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதிலும் இன்னும் முடிவு காணப்படவில்லை.

நாங்கள் அதனை இன்னும் விசாரித்து வருகின்றோம். நான் அதனை நம்பவில்லை (அதாவது இராணுவம் பாலச்சந்திரனை கொலை செய்தது என்பதை) ஆனால், அது உண்மையா என்பதை நான் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் விசாரணை நடந்து வருகிறது. போரில் இருதரப்பினரும் சண்டையிடும் போது, யார் யாரைச் சுட்டார்கள் என்பதை எப்படிக் கூற முடியும்?

தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், இந்திய மீனவர்கள் ஒன்றிரண்டு படகுகளில் வருவதில்லை, நூற்றுக்கணக்கான படகுகளில் இலங்கைக் கடற்பகுதிக்குள் வருகின்றனர். மேலும், ஆழ்கடல் மீன்களை பெருமளவு சிக்கவைக்கும் இராட்சத வலைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இலங்கை மீன் வளம் அழிக்கப்படுகிறது, மேலும் சுற்றுச்சூழல் நாசம் செய்யப்படுகிறது.


நூற்றுக்கணக்கான படகுகள் இலங்கை கடற்பகுதியில் நுழைகின்றன. இது எங்களுக்குக் கெடுதல், சுற்றுச்சூழலுக்குக் கெடுதல், இந்தியாவுக்கும் இது நல்லதல்ல. ஆழ்கடலில் இராட்சத வலை கொண்டு மீன்களைப் பிடிப்பதுதான் பிரச்சினையே தவிர, சர்வதேச கடல் எல்லையை அவர்கள் கடந்து வருவதல்ல

அத்துடன் இலங்கை - சீனா உறவுகள் குறித்து அச்சம் கொள்ளவேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



தவறான, திரிபுபடுத்தப்பட்ட செய்தி வெளியீடு

# பத்திரிகை நிறுவனத்தின் முன்னால் வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

“உனக்கு தலையங்கம் எமக்கு தலைவிதி இதுதான் பத்திரிகை தர்மமா?” “உனது வாழ்வாதாரத்திற்கு “எமது வாழ்வை அழிக்காதே” “தள்ளாதே, தள்ளாதே கழுத்தை பிடித்து தள்ளாதே” நாம் அரசியல் வாதிகள் அல்ல வேலை தேடும் பட்டதாரிகள், அதிகாரம் உள்ள வர்களிடம் வேலைதேடிச் செல்வது தவறா? “நாங்கள் வேலையற்ற பட்ட தாரிகள் எமது வயிற்றில் அடித்து சுயலாபம் தேடாதே” என்ற கோஷங்கள் எழுப்பியவாறு வேலையற்ற பட்டதாரி மாண வர்கள் நேற்று யாழிலிருந்து வெளிவரும் பிரபல பத்திரிகை நிறுவனத்திற்கு முன்னால் ஆரப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்களன்று பேரா தனைப் பல்கலைக்கழக வெளி வாரி பட்டதாரிகள் தமது நிய மனம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந் தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதுவிடயம் தொடர்பில் திரிவுபடுத்தப்பட்ட செய்தியை குறித்த பத்திரிகை வெளியிட் டுள்ளதாக குறிப்பிட்டுபட்டதாரி கள் அந்த செய்தி குறித்து அந்த பத்திரிகையின் அலுவ லகத்திற்கு சென்று வினா வியபோது அவர் கள் அங்கி ருந்து வெளியேற்றப் பட்டிருந்த னர். அதற்கான பதில் வழங்கப் படவல்லை இதனால் பத்திரிகை நிறுவனம் மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கோரி நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டனர்.

கஸ்தூரியார் வீதியினை குறுக்காக நின்று கோசமெழுப் பியதுடன் ஊர்வலமாக அலு வலகம் வரை சென்ற அவர்கள் அலுவலகத்தினுள் செல்ல முற்பட்டபோது அங்கு கடமை யில் இருந்த பொலிஸார் அதற்கு அனுமதிக்காத நிலையில் ஆர்ப்பாட்டம் செய்த பட்டதா ரிகள் தமக்கான சரியான நியா யம் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தனர்.

# வடமாகாண முதல்வரை உளவு பார்க்கவில்லை

குற்றச்சாட்டை மறுக்கும் இராணுவம்

(கொழும்பு)

வட மாகாண முதலமைச் சரையோ அல்லது வடக்கு மக்களையோ உளவு பார்க்க வில்லை என இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

வட மாகாண முதலமைச்ச ரின் பாதுகாப்பிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில ஈடுபடுத்தி வருவதாக்க் குறிப் பிட்டுள்ளார். வட மாகாண முதலமைச்சரின் பாதுகாப்பு கடமைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தம்மை உளவு பார்த்து வருவதாகவும், இராணுவத்தினரின் நடவடிக் கைகளை வடக்கு இளைஞர்கள் கண்காணிக்க வேண்டுமெனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் கோரியிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் உளவு பார்த்த இலங்கைப் பிரஜை கைது



இந்தியாவில் குண்டுத்தாக் குதல் நடத்தவதற்கு திட்டமிட் டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமீம் அன்சாரி யுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரை இந்திய தேசியப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

பாகிஸ்தானுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை பிரஜையான அருண் செல்வராஜன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இவரைக் கைது செய்யும் போது அவரிடம் இரண்டு கட வுச்சீட்டுக்கள் இருந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வராஜன் தென்னிந்திய பாதுகாப்பு கட்டுமானங்களை பற்றி முக்கிய தகவல்களை சேகரித்தார் என்றும், அண்டை நாட்டின் உளவு அமைபுக்காக தரவு சேகரிக்கும் பணியில் ஈடுபடுகிறார் என்பதற்கான சான் றுகளையும் தாம் அவரிடமிருந்து கைப்பற்றியுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செல்வராஜன் இலங்கையில் குற்ற வழக்குகளில் சம்பந் தப்பட்டு தேடப்படும் நபர் என்ப தும், தமக்கு தெரியவந்துள்ளது என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பழைய செய்தியை புதுப்பிக்கிறது இந்தியா

என்கிறது பாகிஸ்தான்

தமது நாட்டுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவர் இந் தியாவில் கைது செய்யப்பட்ட தாக கூறப்படும் குற்றச்சாட்டை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது.

குறித்த கைது விடயம் ஏற்க னவே இடம்பெற்ற சம்பவத்தை மீண்டும் புதுப்பிக்கும் செயலாக இருக்கலாம் என்று பாகிஸ்தான் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக கூறப்பட்ட சில இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்.

இந்த பழைய செய்தியையே இந்தியா மீண்டும் வெளியிட்டுள் ளதாக கருத வேண்டியுள்ள தாக பாகிஸ்தானின் வெளியு றவு பேச்சாளர் தஸ்னிம் அஸ்லம் தெரிவித்துள்ளார்.

இலங்கையை பொறுத்த வரை இவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. எனவே நேற்றைய சம்பவத்தை பழைய வகுதிக்குள்ளேயே உள்ளடக்கவுள்ளதாக அஸ்லம் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தேசிய புலனாய்வு பிரிவின் அறிக்கையின்படி நேற்று இலங்கையரான அருண் செல்வராஜா என்பவர் பாகிஸ்தா னுக்கு உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கையில் சென்னை யில் வைத்து கைது செய்யப் பட்டதாக தெரிவிக்கப்பட்டி ருந்தது.

# பாலியல் துஷ்பிரயோகத்திற்கு பின்னர் எட்டு வயதுச் சிறுமி படுகொலை

மட்டக்களப்பில் கொடூரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டு வயதுச் சிறுமி மூன்று பிள்ளைகளின் தந்தையான அயலவரொருவரால் பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொடூரமான சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் நேற்று அதிகாலை பதுளை மாவட்டம் பதியத்தலாவையில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளார்.

பாலியல் பலாத்காரத்துக் குள்ளாகி இறந்திருக்கும் இந்த சிறுமி அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் மூன்றாம் வகுப்பு மாணவியுமாவார்.

காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் சார்பாக நீதிமன்றத்தில் சட் டத்தரணிகள் எவரும் ஆஜராக வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து மட்டக்களப்பு நீதி மன்றம் முன்பாக இன்று நண்ப கல் அந்த பகுதியை சேர்ந்த பெணகள் உட்பட பொதுமக்கள் ஒன்று கூடி கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை அந்த பகுதியில் மழை பெய்து கொண்டிருந்த வேளை சிறுமியின் உறவின ரொருவரின் கடைக்கு வந்திருந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த சந்தேக நபர் வீடு திரும்புவதற்கு குடையொன் றைக் கொடுத்து உதவிய உறவினர், இந்த சிறுமியையும் கூடவே அனுப்பி அந்த நபரை அவரது சகோதரியின் வீட்டில் விட்டு விட்டு, குடையுடன் திரும்புமாறு கூறி அனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது.

இப்படி அனுப்பப்பட்ட சிறுமி இரவாகியும் வீடு திரும்பாத நிலையில் சிறுமியின் குடும் பத் தினரும் அயலவர்களும் தேடிப்பார்த் தபோது சந்தேக நபரது சகோதரி யின் வீடு மூடப் பட்டிருந்ததாகவும், சந்தேகம் கொண்டு வீட்டுக்கதவை உடைத்துப் பார்த்தபோது சிறுமி கைகால்கள் மற்றும் வாய் கட்டப்பட்டு கட்டிலுக்கு கீழே மயக் கமான நிலையில் பை ஒன்றி னுள் போடப்பட்டிருந்த நிலை யில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் காவல்துறையிடம் தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

சுயஉணர்வற்ற நிலையில் மீட்கப்பட்ட அந்த சிறுமி உடன டியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லும் வழியில் உயிரிழந்த தாக கூறப்படுகிறது.

சந்தேகநபர் இந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக் குட்படுத்தி பிறகு அவரை கொலை செய்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக காத்தான் குடி பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இதேவேளை சந்தேக நப்ரை, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டகளப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் என்.எம். அப்துல்லா நேற்று முன்தினம் உத்தரவிட் டுள்ளார்.

# இந்தியப் பிரஜ்ஜ யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையான் ஹோட்டலில் பணிபுரிந்து வந்த இந்தியன் இனத்தவராகிய கொடியான் சுந்தரபாண்டியன் என்பவரின் விசாக்காலம் 2014.08.30ஆம் திகதியுடன் முடிவடைந்தமையினால் அவரை கைது செய்த யாழ் பொலிஸார் அவரை நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளனர்.

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

SEPTEMBER BATCH
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 19-09-14
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 20-09-14

CENTRE FOR INFORMATION TECHN
-Executive Officer- (C/3504)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.